Registered as a Newspaper
பக்கங்கள் 16 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 38
புதன்கிழமை
03 ஜனவரி 2024
மார்கழி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"துக்கச்சோறு மட்டுமில்லை வெக்கச் சோறு சாப்பிட்டாக்கூட உந்த வரியள் இறங்காது பாருங்கோ"

## யாழ்ப்பாணத்தில்
# டெங்கைத் தடுக்க அதிதீவிர நடவடிக்கை
### பொலிஸ், இராணுவமும் களத்தில்
### 12 பேர் மீது வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஜனவரி 3

டெங்குத் தொற்று யாழ்ப்பாணத்தில் தீவிரமாகப் பரவிவரும் நிலையில், டெங்கைத் தடுப்பதற்குரிய செயற்றிட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பொலிஸாரும் இராணுவமும் களத்தில் இறக்கப்பட்டு தேடுதல், கண்காணிப்பு நடவடிக்கைகள் என்பன போர்க்கால அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## கச்சதீவு திருவிழா பெப்ரவரி 23, 24!

யாழ்ப்பாணம், டிசெ. 3
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழா பெப்ரவரி மாதம் 23 ஆம்

## வற்வரிக்கு எதிராக துக்கச்சோறு!

கொழும்பு, ஜன. 3
ரணில் - ராஜபக்ச அரசின் இறுதிப் பயணம் ஆரம்பித்துவிட்டது

### யாழில் மட்டும்
## திடீர்ச் சுற்றிவளைப்பில் ரூ. 10,500,000 தண்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 3
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பாவனையாளர் அதிகாரசபையினரால் கடந்த வருடம் முன்னெடுக்கப்பட்ட சிறப்புச் சுற்றிவளைப்புகளின்போது அண்ணளவாக ஒரு கோடியே 5 இலட்சம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டுள்ளது.
பாவனையாளர் அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் ஜகுபர் சாதிக் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த 2023 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசெம்பர் மாதம்வரை யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது பல்வேறு சுற்றிவளைப்புகளை மேற்கொண்டது. இந்தச் சுற்றிவளைப்புகளின்

### கொரோனாப் பெருந்தொற்று
## ஜே.என். வைரஸ் திரிபு இலங்கைக்குள் இல்லை
### சுகாதார அமைச்சர் உறுதி



கொழும்பு, ஜன. 3
இந்தியாவில் மிக விரைவாகப் பரவிவரும் ஜே.என்.-1 என்ற கொரோனா வைரஸ் இதுவரை இலங்கைக்குள் ஊடுருவவில்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்ததாவது:-

## 2023ஆம் ஆண்டில் மழைவீழ்ச்சி குறைவு

யாழ்ப்பாணம், ஜன. 3
2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகின்றபோது 2023 ஆம் ஆண்டில் குறைந்தளவு மழைவீழ்ச்சியே பதிவாகியுள்ளது என்று இடர் முகாமைத்துவப் பிரிவின் யாழ். மாவட்ட

### இந்தியாவில் தங்கியுள்ள
## ஈழத்தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை
### பா.ஜ.க.வின் தமிழகத்தலைவர் அண்ணாமலை வலியுறுத்து

புதுடில்லி, ஜன. 3
இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப்போர் காரணமாகவும், இன்னபல காரணங்களாலும் இந்தியாவில் தஞ்சமடைந்து அகதிகளாக உள்ள இலங்கைத் தமிழர்

### மீன் களஞ்சியசாலையில் தீ:
## மலையக இளைஞர்கள் உடல்கருகி உயிரிழப்பு
### பருத்தித்துறையில் சோகம்

யாழ்ப்பாணம், ஜன. 3
பருத்தித்துறை முனைப் பகுதியில் உள்ள தனியார் மீன் ஏற்றுமதி நிறுவனத்தின் களஞ்சியசாலையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற தீ விபத்தில் மலையகத்தைச்









2023/2024 உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கு இலங்கை வங்கியின் நல்வாழ்த்துகள்!

2024 ஜனவரி 4 முதல் உங்களது 18+/18 Smart Gen கணக்கில் ஆகக்குறைந்தது 10,000 ரூபாயினை தொடர்ச்சியாக 6 மாதங்கள் வைத்திருங்கள்.
ரூ.30 மில்லியனுக்கும் மேற்பட்ட நனஜய புலமைப்பரிசில்களை வெல்லுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு BOC வலைத் தளத்தை, Facebook பக்கத்தை, 1975 அழைப்பு நிலையத்தை அல்லது நாடெங்குமுள்ள இலங்கை வங்கிக் கிளைகளை நாடுங்கள்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

1975 BOC CALL CENTRE
www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறை நிரம்பினாலும் கைதுகள் தொடரும்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் திட்டவட்டம்



**கொழும்பு, ஜன.3**

**சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றன என்பதற்காக போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் சந்தேகநபர்களை கைது செய்வதை பொலிஸ் நிறுத்தாது என பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.**

நெரிசல் பிரச்சினை நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்கள் தீர்க்க வேண்டிய ஒன்று எனவும், அது தமது அமைச்சுக்கான விடயம் அல்லவெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருளை ஒழிக்கும் நோக்கில் பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் ஏனைய பாதுகாப்பு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் பொலிஸாரால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட "யுக்திய" நடவடிக்கையின் போது ஆயிரக்கணக்கான சந்தேகநபர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளமையால்சிறைச்சாலைகள் நிரம்பியுள்ளன என்று தெரிவிக்கப்படும் நிலையில், அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-இ)

# வரி எண் பதிவு ஆரம்பம்

கொழும்பு, ஜன.3

18 வயதுக்கு மேற்பட்டவர்களின் வரி எண்களைப் பதிவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான விண்ணப்பத்தை இறைவரித் திணைக்கள இணையத்தளத்தில் சென்று பூர்த்தி செய்துகொள்ளலாம். மதிப்பீட்டு ஆண்டுக்கு 12 இலட்சம் ரூபாவுக்கு மேல் சம்பாதிக்கும் எவரும் வரிக் கோப்பைத் திறக்கவேண்டும். ஒரு வருடத்தின் ஏப்ரல் 1ஆம் திகதி முதல் அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வரையிலான காலம் மதிப்பீட்டு ஆண்டாகக் கருதப்படுகிறது.

வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படும் எனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. பதிவு செய்து கொள்ளாதவர்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பதிவு செய்யும் எனவும் இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ-இ)

# கோண்டாவிலில் சிக்கிய போதைப்பொருள்கள்

## இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.3

கோண்டாவிலில் உள்ள வீடொன்றில் இருந்து போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை 50 ஆயிரம் ரூபா பணத்துடன், யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

அவரது வீட்டைச் சோதனைக்குட்படுத்தியபோது, 500 கிராம் கேரளக் கஞ்சா, 100 கிராம் ஹெரோய்ன், ஆறு போதை மாத்திரைகள், போதை மருந்தேற்ற பயன்படுத்தப்படும் ஊசிகள் என்பன மீட்கப்பட்டன என்றும் அங்கிருந்த மற்றுமொருவர் கைதுசெய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. 24 மற்றும் 21 வயதான இருவரே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர், என்பதோடு போதைப்பொருள் விற்பனையிலும் ஈடுபடுவர் என்றும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-125-20)

# சாதகமான சூழலிலேயே தேர்தல் நடத்தப்படும்!

## அமைச்சர் நளின் தகவல்

கொழும்பு, ஜன.3

2024ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டு என்று சிலர் கூறினாலும், அரசாங்கம் 100 வீதம் வெற்றிகரமான பாதையில் பயணிக்கும் போதுதான் ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் நடத்தப்படும் என நுகர்வோர் விவகார மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.



பாதகமான சூழ்நிலையில் அரசாங்கம் தேர்தலொன்றுக்குச் செல்லாது. ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத்தேர்தலை நடத்த நாட்டுக்கு உரிய பொருளாதார அடித்தளம் இடப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறான பின்புலத்தில்தான் நாம் தேர்தலை நடத்துவோம்.

முட்டாள்தனமாக எமக்குப் பாதகமான சூழ்நிலை இருக்கும்போது தேர்தலுக்குச் செல்லமாட்டோம். மக்கள் எதிர்பார்க்கும் வேலைத்திட்டத்துடன் எதிர்காலத்தில் மக்களிடம் செல்வோம். இது தேர்தல் ஆண்டு எனக் கூறுபவர்களுக்கு வழங்கக்கூடிய செய்தி இதுதான் என்று அவர் கூறியுள்ளார். (எ-இ)

# மாற்றுத்திறன் சிறுவர் பதிவுகள் கட்டாயம்

## கல்வி அமைச்சு தகவல்

கொழும்பு, ஜன. 3

விசேட தேவையுடைய பிள்ளைகளை வலயக் கல்வி அலுவலகங்களில் பதிவு செய்வது கட்டாயம் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அந்தக் குழந்தைகளுக்கு முறையான கல்வியை வழங்கும் நோக்கில் இது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அவர்களின் சிறப்புத் தேவைகளைக் கருத்தில் கொள்ள அலுவலக அளவில் நூறு மதிப்பீட்டுக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

விசேட தேவையுடைய பிள்ளைகளை உரிய வயதில் பாடசாலைகளுக்கு முதலாம் தரத்துக்கு அனுப்புவது தொடர்பான பாடத்திட்டத்தையும் அமைச்சு தயாரித்து இந்த மதிப்பீட்டுக் குழுக்களுக்கு வழங்கியுள்ளது.

பதிவு செய்யப்படும் பிள்ளைகள் பாடத்திட்டத்தின்படி கற்பிக்கப்படுவார்கள் என்று அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (ச-இ)

# கசிப்பு விற்பனை சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 3

வடமராட்சி கிழக்கு நாகர்கோவிலில் கசிப்பு மற்றும் கோடாவுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நாகர்கோவில் பிரதேசத்தில் கசிப்பு வியாபாரம் இடம்பெறுகிறது எனக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த குற்றச்செயல் தடுக்கப்பட்டது.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு சட்டநடவடிக்கைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-100)

# நாவாந்துறையில் டெங்கு தடுப்புப் பணி

யாழ்ப்பாணம், ஜன. 3

டெங்கின் தாக்கம் கூடுதலாகக் காணப்படும் நாவாந்துறைப் பிரதேசத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வீடு வீடாகச் சென்று சோதனையிடும் பணிகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளதுடன் சுழற்சிமுறையில் கழிவகற்றும் பணிகளும் இடம்பெறுகின்றன.

மேலும் டெங்குத் தாக்கம் காணப்படும் சகல குடியிருப்புகள், பொது இடங்களில் நுளம்புகளை விரட்டும் முகமாக புகை அடிக்கும் பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

டெங்கை முழுமையாகக் கட்டுக்குள் கொண்டுவர பிரதேச மக்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்றும் சுகாதாரப் பிரிவினர் கேட்டுக்கொண்டனர். (ச-17)

# பொதுக் கழிப்பறை கட்டணம் உயர்வு

கொழும்பு, ஜன. 3

வற் வரி 18 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ள நிலையில், பொதுக்கழிப்பறைகளுக்கான கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது.

அதன்படி, பொதுக் கழிப்பறைகளுக்கான கட்டணங்கள் 10 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

வற்வரியுடன் குடிதண்ணீர்க் கட்டணமும் அதிகரித்துள்ளதன் காரணமாகவே பொதுக் கழிப்பறைகளுக்கான கட்டணம் உயர்த்தப்படுகிறது என்று கூறப்படுகிறது. (ச-இ)

# நீண்ட விடுமுறை 2024 இலும் அதிகம்

கொழும்பு, ஜன. 3

கடந்த ஆண்டைப் போலவே 2024 ஆம் ஆண்டிலும் அதிகளவிலான விடுமுறைகள் காணப்படுகின்ற நிலையில் பெரும்பாலான விடுமுறைகள் வெள்ளிக்கிழமை அல்லது திங்கட்கிழமைகளில் வருகின்றன.

அதன்படி இந்த ஆண்டில் வார இறுதிகளில் சுமார் 10 விடுமுறைகள் காணப்படுகின்றன.

தைப்பொங்கல் , பௌர்ணமி விடுமுறைகள், புனித வெள்ளி, மகா சிவராத்திரி, தமிழ் சிங்களப் புத்தாண்டு, ஹஜ் பண்டிகை என பெரும்பாலான விடுமுறைகள் வார இறுதியில் விடுமுறை நாள்களுடன் இணைந்து வருகின்றன. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய அழிவுகளை அறிக்கையிடப் பணிப்பு

## வடக்கு ஆளுநர் பிறப்பித்தார்

**யாழ்ப்பாணம், ஜன.3**

**இயற்கை அனர்த்தங்களின்போது பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக அறிக்கையிட வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் துறைசார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

இயற்கை அனர்த்தங்களின் போது சொத்துகள், உயிர்ச் சேதங்கள் தொடர்பில் மாத்திரம் அறிக்கையிடப்படுகின்றன. பயிர்ச்செய்கைகளுக்கான சேத விவரங்கள் சேர்க்கப்படுவதில்லை.

அதனால் விவசாயிகள் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பாக ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு உரிய முறையில் நட்டஈடு கிடைப்பதில்லை. காப்புறுதிகள் கிடைப்பதில்லை என்றும், சேத விவரங்கள் பட்டியலிடப்படாமையே அதற்குக் காரணம் என்றும் விவசாயிகள் குற்றச் சாட்டுகின்றனர்.

அதையடுத்து விவசாய அழிவுகளையும் இடர் முகாமைத்துவ நிலையம் சேகரிக்க வேண்டும் என்றும், தரவுகளை இற்றைப்



படுத்தி, உறுதிசெய்ய வேண்டியது இடர் முகாமைத்துவ நிலையத்தின் கடமை எனவும் ஆளுநர் அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார். (எ-26,27)



## வெளிநாடு செல்ல 2,97,000 பேர் பதிவு

கொழும்பு, ஜன.3

2023ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பதிவுகள் 2 லட்சத்து 97 ஆயிரத்தை எட்டியுள்ளன என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக மொத்தம் 2 லட்சத்து 97 ஆயிரத்து 100 பதிவுகள் கிடைத்துள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். (எ-இ)

## நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை

கொழும்பு, ஜன.3

வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாய தேசிய சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

அரசாங்கம் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்காலத்தில் கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அந்தச் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## பெருந்தோட்டப் பகுதிகளில் உணவுப் பாதுகாப்பின்மை

கொழும்பு, ஜன.3

இலங்கையில் பெருந்தோட்டப்பகுதிகளில் 51 சதவீதமான குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பின்மைக்கு முகங்கொடுத்துள்ளனர்.

நாட்டின் ஏனைய பாகங்களுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்டப் பகுதிகளிலேயே அதிகளவானோர் இந்த நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## விமானப்படையகம் புதிதாகத் திறப்பு

கொழும்பு, ஜன. 3

புதிய விமானப்படைத் தலைமையகம் நேற்று முன்தினம் பத்ரமுல்லையில் திறக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் திறந்து வைத்தார்.

பழைய விமானப்படைத் தலைமையகம் பொலிஸ் தலைமமையகத்திடமும் பொலிஸ் தலைமையகக் கட்டடமும் வெளிவிவகார அமைச்சு கட்டடமும் உல்லாசப்பயணசபையிடம் கையளிக்கப்படவுள்ளன என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ச-6)

## வெற்றுக்காணிகளைத் துப்புரவாக்கப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ்.நகரத்தில் பற்றைகளாக - நுளம்பு பரவக்கூடிய ஏதுநிலையில் காணப்படும் வெற்றுக்காணிகள் இரு வாரங்களுக்குள் துப்புரவு செய்யப்படாவிடின் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

டெங்கு நுளம்பு பரவல் தடுப்புச் சட்டத்தின் பிரகாரம் சட்டநடவடிக்கை எடுக்கப்படுவதுடன் முன்னறிவித்தலின்றி ஆதனம் அரச உடைமையாக்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும்.

எனவே நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த காணி உரிமையாளர்கள் உடன் காணிகளைத் துப்புரவுசெய்து ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அதேவேளை - துப்புரவின்றிக் காணப்படும் வெற்றுக்காணிகளுக்கு முன்பாக சிவப்பு அறிவித்தல் பதாகைகளும் சுகாதாரப் பிரிவினரால் கட்டப்பட்டு வருகின்றன. (ச-17)

## புதினம் தெரியுமோ?

**'இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா?' இப்பிடியொரு படம் பார்த்திருப்பியள். அதுக்கு முதலே இதே தலைப்பில எழுத்தாளர் பாலகுமாரன் புத்தகம் ஒண்டு வெளியிட்டவர். அதின்ர தாக்கத்திலதான் உந்தப்படத்துக்கும் இப்பிடிப் பேர் வைச்சவை. ஆனால் அந்தப் புத்தகத்தைவிட அந்தப் பெயரைக் கொப்பியடிச்சு வந்தபடம் தான் எல்லாருக்கும் தெரிஞ்சிருக்கு. முந்தி வந்த செவியை பிந்தி வந்த கொம்பு மறைச்ச கதைதான் இதுவும். சரி, இனி விசயத்துக்கு வருவம். இப்ப எங்களைச் சுத்தி நடக்கிற கூத்துகளையும், கும்மாளங்களையும் பாக்கேக்க 'இதுக்குத்தானோ போராடினோம் பாலகுமாரா?'எண்டுதான் கேக்க வாய் உன்னுது.**


**வருசக் கடைசியில கன இடங்களில் தண்ணிப் பார்ட்டியள் கோலாகலமா நடந்தேறியிருக்கு. முந்தியெண்டால் நாலைஞ்சுபேர் போத்திலை எடுத்துக் கொண்டு வந்து அக்கம் பக்கத்துக்குத் தெரியாமல் குடிச்சுப்போட்டு மட்டையாகிறதுதான் பெரும் பார்ட்டியா இருந்தது. இப்ப அப்பிடியில்லை. குடிக்கிறதே ஒரு பஷனாகிட்டுது. அதால கும்பலா வந்து, நாலைஞ்சு கிலோமீற்றருக்கு அங்கால சத்தம் கேக்கிறளவுக்கு ஆடிப்பாடி, குடிச்சு கும்மாளம் போட்டு, அடிபிடிப்பட்டு, எல்லாரின்ர நிம்மதியையும் கெடுக்கிறதைத்தான் இப்ப எல்லாரும் 'பார்ட்டி' எண்டு பெருமையாச் சொல்லுகினம். சில ஹொட்டல்கள் தங்கட வருமானத்துக்காக இப்ப வருசக் கடைசியில இப்பிடியான பார்ட்டியளை வைக்கிறவை. சும்மா குடிச்சிட்டு ஆடுறதை இப்ப டீஜே எண்டு சொல்லுற பாட்டுக்களை கூட்டிக் குறைச்சுப் போட்டு கலர்புல்லாக்கி வைச்சிருக்கினம்.**

**இப்பிடி ஒரு டீஜே பார்ட்டியை போன 31ஆம் திகதி நேவியும் நடத்தியிருக்கு. காரைநகரில உள்ள கடற்கோட்டை ஒரு தொல்லியல் சின்னம். அதை இப்ப ஹொட்டலாக்கி நேவிக்காரர் காசு ருசி கண்டிட்டினம். அதை இன்னும் கூட்டிறதுக்காக அவை வைச்ச பார்ட்டிக்கு எங்கட யாழ்ப்பாணப் பெடிபெட்டையளும் போயிருக்கினமாம். நாய்க்கு நடுக்கடலிலயும் நக்குத்தண்ணியாம். எங்கட இளசுகள் சிலது நடுக்கடலிலையும் டீஜே பார்ட்டியெண்டா விழுந்தடிச்சுப் போற நிலையில தான் இருக்கினம். அப்பிடி பார்ட்டிக்குப் போன பெடியள், அங்க வந்த ஒரு பெட்டையோட ஏதோ சேட்டைவிட அது பெரிய பிரச்சினையாகி, அடிதடியாம். கடைசியில காசில்லாட்டியும் பரவாயில்லை, உந்தச் சண்டையை நிப்பாட்டினாச் சரி எண்ட நிலைக்கு வந்த நேவிக்காரர், பிரச்சினை பண்ணின பெடியளை அடிச்சுத் துரத்தியிருக்கிறாங்கள். இந்த அவமானம் எங்கட இளசுகளுக்குத் தேவையா? இப்பிடி நேவிக்காரரோட டீஜே பார்ட்டி வைக்கத்தானோ 'எங்கட பெடியள்' உயிரைக் குடுத்துப் போராடினவங்கள்?**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புத்தாண்டு பலன்கள் 2024




நுனி மரத்தில் அமர்ந்து கொண்டு அடிமரத்தை வெட்டக்கூடாது என்பதை அறிந்த நீங்கள், உண்ட வீட்டுக்கு ரெண்டகம் நினைக்காதவர்கள். செய்நன்றியை ஒருபோதும் மறவாத நீங்கள், தன்னை எதிரியாக நினைத்தவர்களுக்கும் நல்லதே நினைக்கும் குணம் படைத்தவர்கள்.

உங்கள் ராசிக்கு தைரிய வீட்டில் இந்தாண்டு பிறப்பதால் எதையும் தள்ளிப்போடாமல் தெளிவாக முடிவெடுப்பீர்கள். ரத்த அழுத்தம், நீரிழிவு நோயெல்லாம் கட்டுப்பாட்டுக்குள் வரும். இளைய சகோதர வகையில் இருந்த சிக்கல்கள் தீரும். பூர்வீக சொத்துப் பங்கை கேட்டு வாங்குவீர்கள். இந்த ஆண்டு தொடக்கம் முதல் 30.4.2024 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு இலாப வீட்டிலே வலுவாகக் காணப்படுவதால் திடீர் பணவரவு உண்டு. நீண்டநாளாக எதிர்பார்த்திருந்த பணம் கைக்கு வரும். மூத்த சகோதரர் உதவ முன்வருவார். பெரிய பதவிகள் தேடி வரும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். வீடு கட்டும் பணியைத் தொடர்வீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும். பழைய கடனில் ஒருபகுதியைத் தீர்க்க வழி பிறக்கும்.

1.5.2024 முதல் வருடம் முடியும் வரை குருபகவான் 12ம் வீட்டில் சென்று மறைவதால் திடீர் பயணங்கள், செலவுகள் அதிகரிக்கும். ஒரேநேரத்தில் பல வேலைகளையும் பார்க்க வேண்டி வரும். அநாவசிய செலவுகளைக் குறைக்கப் பாருங்கள். முன்பின் அறியாதவர்களை வீட்டில் சேர்க்க வேண்டாம். வீடு, மனை விற்பது வாங்குவது இலாபகரமாக முடிவடையும். நீண்ட நாள்களாகத் தரிசிக்க நினைத்த புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

ராகு பகவான் இந்த வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்கு 10ம் வீட்டில் அமர்வதால் வேலைச்சுமை அதிகரிக்கும். எதிர்த்தவர்கள் நண்பர்களாவார்கள். பெரிய பதவிகள் தேடி வரும். சிலர் புது வேலைக்கு மாறுவீர்கள்.

கேது பகவான் இந்த வருடம் முழுவதும் உங்கள் ராசிக்கு 4ம் வீட்டில் அமர்வதால் வாகன விபத்துகள், காரியத் தாமதம், வீண் அலைச்சல், பதற்றம் வந்து போகும். உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும். தாயாரின் உடல்நலம் பாதிக்கும். அவருடன் வீண்விவாதங்களும் வந்து போகும். அவ்வப்போது மற்றவர்களைப் போல நம்மால் சுதந்திரமாக இருக்க முடியவில்லையே என வருந்துவீர்கள். வீடு, மனை வாங்குவது, விற்பதில் வில்லங்கம் வந்து விலகும்.

சனி பகவான் இந்த வருடம் முழுக்க வரை ராசிக்கு 9ம் வீட்டில் தொடர்வதால் அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். தந்தையின் உடல் நிலை பாதிக்கும். வழக்கில் திருப்பம் ஏற்படும். அக்கம் பக்கம் வீட்டாருடன் இருந்த சண்டை, சச்சரவுகள் நீங்கும்.

**வியாபாரிகளே!** மார்ச் மாதத்திலிருந்து கணிசமாக இலாபம் உயரும். வேலையாள்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்காதீர்கள். சலுகைத் திட்டங்கள் மூலம் புது வாடிக்கையாளர்களைக் கவர்ந்திழுப்பீர்கள். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்

**உத்தியோகத்தர்களே!** 1.5.2024 முதல் வீண் பழிகளை சுமக்க வேண்டி வரும். நேரம், காலம் பார்க்காமல் உழைத்தும் கடைசியில் மிஞ்சியதென்னவோ கெட்ட பெயர் தான் என்று அலுத்துக் கொள்ள வேண்டி வரும். நல்ல வாய்ப்புகளும் தேடி வரும். ஜூன், செப்ரெம்பர், நவம்பர் மாதங்களில் சம்பள உயர்வு உண்டு.

**இந்தப் புத்தாண்டு சின்னச் சின்ன ஏற்றத்தாழ்வுகளையும், செலவுகளையும் கொடுத்து வந்தாலும் உங்களின் வளர்ச்சிப் பணிகள் தொய்வில்லாமல் தொடர்வதாக அமையும்.**

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதியதிட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள். திடீர் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** பிரமுகர்களை சந்திப்பீர்கள். வீண் செலவுகள் ஏற்படும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**மிதுனம்:** திட்டவட்டமாக சில முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கடகம்:** சந்தோஷம் நிலைக்கும். பாதியில் நின்ற வேலைகள் விரைந்து முடியும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**சிம்மம்:** வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.

**கன்னி:** குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வீண் வாதங்களில் ஈடுபட வேண்டாம். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வந்து விலகும்.

**துலாம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் கடமையுணர்வுடன் செயற்படுவார்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள் சிறப்பான நாள்.

**விருச்சிகம்:** கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக்கூர்ந்து மகிழ்வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைகட்டும். வாகன வசதிப் பெருகும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**தனுசு:** மனம் விட்டு பேசுவீர்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உரிமையை பெறுவீர்கள். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**மகரம்:** அநாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். இடர்பாடுகளை சமாளிக்க நேரிடும்.

**கும்பம்:** விவாதங்கள் வந்து போகும். மனைவி வழியில் அந்தஸ்து உயரும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள்.

**மீனம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள்.

# ஆரோக்கியமான சந்ததிக்கு அறநெறிக் கல்வி அவசியம்!

*முல்லை மாவட்டச் செயலாளர் தெரிவிப்பு*

முல்லைத்தீவு, ஜன.3

மாணவர்கள் மத்தியில் அறநெறிக் கல்வி அவசியமாகின்றது என முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் திருமுறிகண்டி இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற தெய்வீக கிராம நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எமது இளம் சந்ததியினர் மத்தியில் அறநெறி பண்புகள் கூடுதலாக வளர்க்கப்படுவதற்கு இவ்வாறான நிகழ்வுகள் அவசியமானது. இந்தப் பாடசாலையில் பௌதீக வளப் பற்றாக்குறைகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதனைப் பூர்த்தி செய்வதற்கு கல்வி அமைச்சின் உயரதிகாரிகளுடன் கலந்துரையாடுவேன். திருமுறிகண்டிப் பிரதேசம் புனித பிரதேசமாக உள்ளதன் காரணமாக அதனைப் பின்பற்றி அனைவரும் தம்மை வளர்த்துக் கொள்ளவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ரி-13)

# மழை வெள்ளத்தால் விவசாயம் பாதிப்பு!

முல்லைத்தீவு, ஜன. 3

வெள்ள அனர்த்தத்தால் முல்லைத்தீவு மாவட்டம் பாண்டியன்குளம் மற்றும் துணுக்காய் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் விவசாயிகளின் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அழிவுகளுக்கான இழப்பீட்டை அரசாங்கம் வழங்க வேண்டும் என்று அந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை துணுக்காய் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட பகுதிகளில் இந்தமுறை 7 ஆயிரத்து 840 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. 2 ஆயிரத்து 300 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன என்று துணுக்காய் கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் விஜயரத்தினம் வசந்தன் தெரிவித்தார்.

3 ஆயிரத்து 800 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளநீரில் மூழ்கியுள்ளன என்று பாண்டியன் குளம் கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் தனபாலசிங்கம் குணாளன் தெரிவித்தார். (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தவறுகளை உணர்தலும் முன்னேற்றமே!


மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, நாட்டின் இன்றைய நிலைமைக்கு தெற்கு அரசியல்வாதிகளின் இனவாதச் செயற்பாடுகளே காரணம் என்று கூறியிருக்கின்றார். தனது கட்சியின் மகளிர் அணியின் வருடாந்த மாநாட்டில், மக்கள் விடுதலை முன்னணியின் கோட்டை என்று கூறப்படும் மாத்தறையில் பகிரங்கமாகக் கூறிய அவரது இந்தக் கருத்து, வாக்கு வங்கிக்கானது அல்ல என்று நிச்சயமாகக் கூறமுடியும்.

கடந்த காலங்களில் மக்கள் விடுதலை முன்னணி அதாவது ஜே.வி.பி. கடும் இனவாதக் கட்சியாகவே அறியப்பட்டது - செயற்பட்டது. ஆரம்பத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்திருந்த மக்கள் விடுதலை முன்னணியின் நிறுவுநர் ரோகண விஜேவீர, சண்முகதாசனின் (ஒரு தமிழரின் தலைமையின்) கீழ் இயங்க விரும்பாததாலேயே கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து பிரிந்து சென்று ஜே.வி.பி.யை உருவாக்கியிருந்தார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இணைந்திருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களை சட்டபூர்வமாகப் பிரித்ததும் மக்கள் விடுதலை முன்னணியே.

நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, இப்போது சிங்களத் தலைவர்களின் கடந்தகால இனவாதச்செயற்பாடுகள் இந்த நாட்டின் அழிவுக்குக் காரணம் என்பதைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார். 'இந்தியாவில் காந்தி, நேரு, வல்லபாய் பட்டேல், சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோர் இருந்த காலப்பகுதியில், இலங்கையில் தலைவர்களாக இருந்த டி.எஸ்.சேனநாயக்கா, ஜே.ஆர்,பண்டாரநாயக்கா போன்றவர்கள் பிறப்பால் கிறிஸ்தவர்களாக இருந்தபோதும் நாட்டின் தேசியத்தை முன்னிறுத்தாமல், இனவாதநோக்கிலேயே செயற்பட்டனர். ஆனால் இந்தியத் தலைவர்கள் வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்திய தேசியத்தை முன்னிறுத்தி செயற்பட்டதால்தான், இன்று இந்தியா விண்வெளி ஆய்வுகளை மேற்கொள்ளும் நிலைக்கு அபிவிருத்தி அடைந்துள்ளது' என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இது கண்கெட்ட பின்னர் செய்யும் சூரிய நமஸ்காரம். இருப்பினும் அநுரகுமாரவிலும், தெற்கிலும் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் வரவேற்கப்பட வேண்டியதே. தெற்குத் தலைவர்கள் வடக்கில் ஒன்றும், தெற்கில் ஒன்றும் கூறுவதே இதுவரை வழமையாக இருந்து வருகின்றது. தெற்கிலே சிங்கள இனவாதத்தையும், சிறுபான்மையினரை ஒடுக்கும் கோஷங்களையும் முன்னெடுக்கும் சிங்கள அரசியல்வாதிகள், தமிழர் பகுதிக்கு வரும்போது 'தமிழர்களுக்கு சம உரிமை கிடைக்கவில்லையே' என்று நீலிக்கண்ணீர் வடிப்பதுண்டு. அப்படி அங்கொரு முகமும், இங்கொரு முகமும் காட்டாமல் அநுரகுமார திஸாநாயக்க துணிவுடன் தனது ஆதரவாளர்களுக்கு முன்பாகத் தங்களின் முன்னோரின் செயற்பாடே நாட்டின் அழிவுக்குக் காரணம் என்பதை ஒப்புக்கொண்டிருக்கின்றார். காலந் தாழ்த்தப்பட்ட பின்னரே அநுரகுமாரவுக்கும் சுடலை ஞானம் பிறந்திருக்கிறது. இருப்பினும் வேறெந்தச் சிங்கள அரசியல்வாதியும் ஒப்புக்கொள்ள மறுக்கும் உண்மையை இப்போதாவது வெளிப்படுத்தியமைக்கு அநுரவைப் பாராட்டாமலும் இருக்கமுடியாது.

அநுரகுமாரவின் இந்தப்பண்பு ஏனைய தெற்குத் தலைவர்களுக்கும் வரவேண்டும். தங்கள் கடந்த காலத் தவறுகளை எப்போது ஒப்புக்கொள்கின்றார்களோ - அதைத் திருத்த முற்படுகின்றார்களோ அப்போதுதான் நாடு முன்னேற்றப்பாதையில் காலடி வைக்கும். தவறை மன்னிப்பவன் மனிதன், தவறை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்பவன் பெரிய மனிதன். சிங்களத் தலைவர்கள் பெரிய மனிதர்களாக மாறுவார்களா?




## ஒரு குடும்பத்துக்கு 32,000/= வரி!

கொழும்பு, ஜன.3

பெறுமதி சேர் வரி நடைமுறையால் ஒவ்வொரு குடும்பமும் பொருள்கள் மற்றும் சேவைகளுக்காக மாதாந்தம் 32 ஆயிரம் ரூபாவை வரியாகச் செலுத்த வேண்டியுள்ளது என முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்தார்.

அதேவேளை, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தற்போதைய முறைமை ஏற்றதல்ல என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தெரிவித்துள்ளார். (எ)

## நகர்ப்புற மக்களை தாக்கவுள்ள 'வற்'



கொழும்பு, ஜன.3

பெறுமதிசேர்வரிநடைமுறை கிராமப்புற மக்களைவிட நகர்ப்புற மக்களையே அதிகம் பாதிக்கும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் துறையின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார். இந்த வரித் திருத்தம் நகர்ப்புறங்களில் வசிக்கும் நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களையே கடுமையாகப் பாதிக்கும்.

பெறுமதி சேர் வரியால் நாட்டில் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் கணிசமாக உயரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



## ஈவிரக்கமின்றி மக்களை வதைக்கவுள்ள வரிகள்!

யாழ்ப்பாணம், ஜன. 3

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் பல்வேறு நெருக்கடிக்குள் தள்ளவுள்ளது தற்போதைய வற்வரி விதிப்பு. -இவ்வாறு மன்னார் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.. "மக்களின் அன்றாட வாழ்க்கையில் குறித்த வரிகள் ஈவிரக்கமின்றி தாக்கத்தை ஏற்படுத்தவுள்ளது. இந்த வருடத்திலாவது அரசாங்கம் இந்த வரிவிதிப்பை மிகக் குறைவாக மதிப்பீடு செய்யவேண்டும். அத்துடன் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் அரசாங்கம் செயற்படுத்தவேண்டும்" என்றும் அவர் கூறினார். (ச-56)

## அதிக வருமானம் ஈட்டிய சுங்கம்

கொழும்பு, ஜன.3

இலங்கை சுங்கத்துறை வரலாற்றில் கடந்த ஆண்டே அதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஆண்டு 970 பில்லியன் ரூபா வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது என்றும், இதுவரை 2018ஆம் ஆண்டு ஈட்டப்பட்ட 923 பில்லியன் ரூபாவே அதிகளவு வருமானமாகக் காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## நாளை

04.01.2024
வியாழக்கிழமை
மார்கழி 19

சுபநேரம் : 10.30 - 11.30
ராகுகாலம் : 01.30 - 03.00

## நாளொரு நல்வார்த்தை


அதிகாலை நேரமாக எழுவது என்பது எனக்கு நானே கொடுத்துக்கொள்ளக் கூடிய பரிசுகளில் ஒன்று.

- ரொபின் சர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 05 . 1938



மறைவு
02 . 01 . 2024

## தம்பிஐயா கதிரவேற்பிள்ளை

எழுதுமட்டுவாழ் தெற்கு விழுபளையைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் அல்லாரை வடக்கு கொடிகாமத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா கதிரவேற்பிள்ளை 02.01.2024 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் திருமணிதேவியின் அன்பு கணவரும் காலம்சென்றவர்களான தம்பிஐயா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை இலட்சுமி தம்பதியரின் மருமகனும் அமரர் தங்கரத்தினம், அமரர் மாரிமுத்து, தங்கராசா, அமரர் நடேசபிள்ளை, அமரர் சுந்தரலிங்கம், அமரர் இரத்தினம், சிவராமலிங்கம் (நியூஸிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் சிவபாக்கியத்தின் அன்பு மைத்துனரும், கஜேந்திரன் (அதிபர்- கிளி/ இயக்கச்சி மகா வித்தியாலயம்), ரமேஸ் (நோர்வே), சுபாஸ் (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இந்துமதி (ஆசிரியை-யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப்பாடசாலை), புவிதா (நோர்வே), ஜெயந்தி (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் விஷ்ணு, அமரர் சுகந்தா, அஜந்தா (ஜேர்மனி), அமரர் குமணன் ஆகியோரின் பெரியப்பாவும் பத்மஜன், தக்சிகா, ஆகாஸ், ஆருஸ், சுபீட்சா, பைந்தமிழ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (2024.01.03) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அல்லாரையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செல்லையா வீதி,
அல்லாரை வடக்கு
கொடிகாமம்

தகவல்: குடும்பத்தினர்
0779009420 (கஜேந்திரன்)
0212050626

# கனடா பிராஜாவுரிமை பெற்றவர் யாழ். போதனாவில் உயிரிழப்பு!

## தாயகம் திரும்பிய நிலையில் சோகம்

யாழ்ப்பாணம், ஜன. 3

கனடாவில் குடியுரிமைபெற்ற வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வயோதிபர், கனடாவிலிருந்து தாயகத்துக்குத் திரும்பியிருந்த நிலையில், உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார்.

கனடா, மொன்றியேலைச் சேர்ந்தவரும், தற்போது வல்வெட்டித்துறை ரேவடியில் வசித்து வந்தவருமான வேலுப்பிள்ளை நந்தகுமார் (வயது-60) என்பவரே உயிரிழந்தவராவார்.

வாய் மற்றும் மூக்கில் இருந்து நுரை வெளியேறிய நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 29ஆம் திகதி சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு உயிரிழந்தார்.

வல்வெட்டித்துறையில் இருந்து புலம்பெயர்ந்து கடந்த 40 வருடங்களாக அவர் கனடாவில் வசித்து வருகின்றார். கனடாவில் தற்போது குளிர் காலம் என்பதால், இலங்கைக்கு வந்து தங்கியிருந்துவிட்டுச் செல்வதற்காக வந்த வேளையிலேயே இந்த அசம்பாவிதம் நடந்துள்ளது.

இறப்பு விசாரணைகளை பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா மேற்கொண்டார்.

(அ-ம-100)

# 4 ஆம் ஆண்டு நினைவில்...

## அமரர் திருமதி தேவராசா ஆனந்தி



மண்ணில் 07.09.1969 விண்ணில் 18.12.2019

திதி: தேய்பிறை சப்தமி


வானும் கனல் சொரிந்த நாளொன்றில்
காலனவன் உங்களைக் கவர்ந்து சென்று
நான்காண்டுகள் ஓடிமறைந்தும் கூட
தேனாகச் சுரந்திடும் உங்கள்
அன்பும் ஆனந்தமும் இழந்து
அனுதினமும் தவிக்கிறோமே!

தொல்புரம் மேற்கு
சுழிபுரம்

பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 01 . 1928



மறைவு
01 . 01 . 2024

## வயிரவி பொன்னுத்துரை (நடேசு)

கயந்தப்பை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வயிரவி பொன்னுத்துரை (நடேசு) அவர்கள் கடந்த 01.01.2024 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வயிரவி இலட்சுமி தம்பதியரின இளைய புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தக்குட்டி தெய்வானை தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆறுமுகம் அவர்களின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான முருகேசு, இலட்சுமி, பார்வதி, மற்றும் சின்னத்தங்கம், பொன்னு, சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், மல்லிகாதேவி, காலஞ்சென்ற மனமோகன் மற்றும் மனோகரன் (ஓய்வுபெற்ற ப.நோ.கூ.ச கிளைமுகாமையாளர்), மகாதேவன் (ஓய்வுபெற்ற கால்நடை வைத்தியர்), மகேந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் கலாநிதி, காலஞ்சென்றவர்களான றதி, ஜெயமாலா மற்றும் சுகுணாதேவி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தயாபரன் - சுதாஜினி, காலஞ்சென்ற தயாளினி, சிவாஜினி - இந்திரஜித், சேயன் - சினீசா, அபிவர்ஷனி - சித்திராங்கன், துவாரகன் - டிலந்தி, பிரியங்கன், நர்த்தனன், சிறீசன், தந்தகரன், துஷாந்தி, குகாங்கன், கர்சன், கர்ஷாந் ஆகியோரின் பேரனும், பிரசாயினி, கர்சயன், சுபனியா, அருக்ஷனா, ஷயீஸ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 078 1629
077 103 5183
+447859059638

(CS 27543) S-1

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 09 . 1953



மறைவு
02 . 01 . 2024

## திருமதி செல்வராஜா மகேஸ்வரி

பலாலி கிழக்கை பிறப்பிடமாகவும் பலாலி தெற்கு வசாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராஜா மகேஸ்வரி 02.01.2024 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம்- விசாலாட்சி தம்பதியரின் புதல்வியும் செல்வராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மாரிமுத்து- லக்சுமியின் மருமகளும் இராஜேஸ்வரி, ஈஸ்வரி, தவராசா, காலஞ்சென்ற யோகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரமேஸின் அன்புத் தாயாரும் தாரணியின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 03.01.2024 அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக பலாலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டுவன் கரண்டைக்குளம் அகில இலங்கை சபரிகிரி ஸ்ரீ ஐயப்பசுவாமி பீட மண்டல பாதயாத்திரை கடந்த வியாழக்கிழமை கல்வியங்காடு புலவனார் வீதியிலமைந்த குருஸ்வாமியின் இல்லத்தில் இருமுடிகட்டப்பட்டது. பாதயாத்திரையாக கட்டுவனுக்கு கடந்த வெள்ளிக்கிழமை எடுத்துவரப்பட்டு, பதினெட்டாம் படியேறி தர்மஸாஸ்தாவுக்கு நெய்யபிஷேகம் செய்து, விசேட பூஜை, பஜனை ஆராதனைகள் இடம்பெற்றன. (ரி)



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவில், காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவின் நெறிப்படுத்தலின் கீழ் வவுனியாவில் 131 பேருக்கான காணி ஆவணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நீண்டகாலமாக உறுதி வழங்கப்படாதிருந்த வவுனியா பிரதேச செயலகப்பிரிவிலுள்ள கணேசபுரம், மணிபுரம், ஆசிகுளம், சமயபுரம் கிராமங்கள் உட்படப் பல கிராம மக்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. (ரி-110)



யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் திருவாசக முற்றோதல் நிகழ்வு நீராவியடியிலுள்ள பிரதான மண்டபத்தில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் தலைவர் உ. தயானந்தன் தலைமையில் இடம்பெற்றது. (ச-66)



தென்மராட்சிக் கல்வி வலயத்தில் கடந்த எட்டரை ஆண்டுகளாக கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் வ. நடராசாவுக்கான சேவைநலன் பாராட்டு விழா அண்மையில் டிறிபேக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் எஸ். பேரின்பநாதன் தலைமையில் இடம்பெற்றது. (ச-159)



கொழும்பில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரனின் 16ஆவது ஆண்டு நினைவேந்தல் வட்டுக்கோட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் தொகுதி அமைப்பாளர் விஜிமருதன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வி நினைவுப் பேருரைகளைத் தொடர்ந்து மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ச-27,20)



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சமகால அரசியல் அரங்கு நிகழ்வில் அண்மையில் மறைந்த ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டப் பற்றாளரும், தென்னிந்தியாவின் முன்னணி சினிமா நடிகருமான புரட்சிக்கலைஞர் விஜயகாந்துக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-66)



யாழ். தென்மராட்சி மீசாலை வடக்கு "சுடர் ஒளி" பாலர் பாடசாலையின் கலைவிழாவும், கௌரவிப்பு நிகழ்வும் பாலர் பாடசாலை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ரி-27-159)



தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களால் தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் த. கிருபாகரன், சாவகச்சேரி கோட்டக்கல்வி பணிப்பாளர் வ. நடராசா ஆகியோருக்கு சேவை நலன் பாராட்டி பிரிவுபசார விழா வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (ரி-9)



மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர்கள் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையில் இணையும் சின்னம் சூட்டும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னார் மறை மாவட்டமன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் புத்தாண்டு பிறப்பு திருப்பலி நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்புற இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து திருப் பலியை ஒப்புக் கொடுத்தனர். (ச-56)



சர்வதேச கடற்றொழிலாளர் தினத்தை முன்னிட்டு கடற்றொழில் அமைச்சால் "சிற்றலையின் சக்தி" எனும் தொனிப்பொருளில் விசேட நல நிதிக் கொடுப்பனவுகள் கடற்றொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு யாழ். மாவட்டச் செயலகத்தில் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற கடற்றொழிலாளர்களின் 100 பிள்ளைகளுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவும் தொடர்ச்சியாக சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோருக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கிவைக்கப்பட்டன. (ரி-125)



# இரண்டு விமானங்கள் நேருக்குநேர் விபத்து!

## ஐவர் பலி: ஜப்பானில் சோகம்

டோக்கியோ, ஜன. 4

ஜப்பானில் தலைநகர் டோக்கியோவில் உள்ள ஹனேடா விமான நிலையத்தின் ஓடுபாதையில் இரண்டு விமானங்கள் நேருக்குநேர் மோதியதில் ஐவர் உயிரிழந்தனர்.

மிகத் துல்லியமானதும் துரிதமானதுமான மீட்புப் பணிகளால் பெருமளவு உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

ஜப்பான் கடலோர காவற்படையின் விமானமும், ஜப்பான் எயார்லைன்ஸும் நேருக்குநேர் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது. தீ விபத்து ஏற்பட்டபோது, ஜப்பான் ஏர்லைன்ஸ் விமானத்தில் 379 பயணிகள் இருந்தனர். விபத்து ஏற்பட்ட சமயத்திலேயே பயணிகள் மற்றும் பணியாளர்கள் என அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி வருகிறது.

ஜப்பான் ஏர்லைன்ஸ் விமானம் ஹொக்கைடோவில் உள்ள நியூ சிட்டோஸ் விமான நிலையத்திலிருந்து வந்து கொண்டிருந்தது. இதையடுத்து அந்த விமானம் சி ஓடுபாதையில் தரையிறங்கியது. அதேசமயத்தில், ஜப்பான் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய சில பொருட்களுடன் கடலோர காவல்படை விமானம் ஒன்று ஓடுபாதையில் சென்றுகொண்டிருந்து. அந்த விமானத்தின் மீதே ஜப்பான் ஏர்லைன்ஸ் விமானம் மோதியதாகக் கூறப்படுகிறது. (ம)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 04 . 04 . 1948
இறப்பு 03 . 01 . 2023

கடந்த வருடம் 2023.01.03 அன்று இறைபதமடைந்த மாதகலை பிறப்பிடமாகவும் இல- 213/2, திருவையாறு மேற்கை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட

அமரர் திரு. தம்பையா ஈஸ்வரன் (S.K. ஈசன்)
(முன்னாள் கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் Sk, Ts Transport கணக்கு எழுதுநர்

அன்னையென அரவணைத்த
ஆறுதலும் தந்தாய்
தந்தையாய் இருந்து
தாங்கியும் கொண்டாய்
தாய், தந்தை அற்ற
குறையைப் போக்கினீர் மாமாவே!
ஆண்டுகள் கடந்து போகும்
ஆறாது உம் நினைவுகள்

அரும்புகள் பூவாய்
காயாய், கனியாய்...
பின்னர் விதையாய்...
விருட்சமாய் வளரும் வீழும்
தினமும் மனதுக்கு நிம்மதி தந்து
உங்கள் நினைவுகள்
என்றும் வாழும்
எம் இதயக் கோயிலிலே...

இல: 213/2, திருவையாறு மேற்கு
கிளிநொச்சி
077 6941311/ 077 0724631

தகவல்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 19 . 12 . 1975
இறப்பு 24 . 12 . 2013

திருமதி சிவலோஜினி சுரேஸ்குமார்
திதி: அபரபக்க ஸப்தமி (03.01.2024)

ஆண்டுகள் ஐயிரண்டு ஆனதுவாம் ஆனாலும்
ஆறவில்லை எம் மனதில் உன் நினைவு
சிவலோஜினி......
எம் சிந்தை எல்லாம் நிறைந்தவளே
வங்கக்கடல் போல எமக்கு அன்பை வாரிவழங்கியவளே ஆண்டவர்க்கும் பொறுக்கவில்லையா?
உன் நிழல் போல் எப்போதும் நம் மழலைகள் எம் அருகே.....
உன் எண்ணம் போல் அவர்கள் தம்வாழ்வு செழித்திட உழைப்பதே என் பணி
ஆண்டுகள் பத்தென்ன ஆயுசுக்கும் மறக்காது உன் நினைவு
நிம்மதியாய் நீ தூங்கு

கலைவாணி வீதி,
சித்தன்கேணி

பிரிவால் துயருற்றிருக்கும்
கணவர், பிள்ளைகள்.

(cs.53381)(N.I)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை




"நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை போற்றி யொழுகப் படும்"

**பொருள்:** நிறை உடையவனாக இருக்கும் தன்மை தன்னை விட்டு நீங்காமலிருக்க வேண்டினால், பொறுமையைப் போற்றி ஒழுக வேண்டும். - வள்ளுவர்

# நாங்கள் சமயம் சார்ந்தவர்களா?

க.நா.சபாரத்தினம்



ஒவ்வொரு தனிநபரும் ஒவ்வொரு சமயத்தில் உள்ளவர்கள் என்பது பெரும்பாலானவர்களின் நிலைப்பாடாகும். இதில் தெளிவுபடுத்தவேண்டிய விடயங்கள் தெளிவுபடுத்தப்படாமலும் தெளிவுபடாமலும் இருப்பதே உண்மையாகும். சமூக அமைப்பில் பார்ப்போமாகில் ஒவ்வொருவரும் யான் இந்த சமயத்தில் உள்ளேன் இதில் எத்தனையோ விடயங்களுக்கான பல முயற்சிகளை மேற்கொள்கின்றேன். விழா நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துகின்றேன். தேவையானபோது நிதி உதவிகளை வழங்குகின்றேன். எல்லா விடயங்களிலும் எனது பங்களிப்பு உண்டு எனச் சிந்திக்கும் தன்மையில் குறிப்பிட்ட விகிதத்தினர் இல்லாமலில்லை.

இன்னுமொரு பகுதியினர் சிந்தனையில் எமது மதத்தை மற்றவர்கள் சிதைக்கப்பார்க்கிறார்கள். நாங்கள் பாதுகாக்கவேண்டும் என்று கூறிக் கொள்வதோடு மற்றவர்கள் மனதை புண்படுத்தக்கூடிய செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன் நாமே குறிப்பிட்ட சமயத்தின் பாதுகாவலர்கள் நாம் இல்லாதவிடத்து எமது சமயம் அழிந்துவிடும் எனக் கூறுபவர்களும் உள்ளனர்.

மேலும் சில பிரிவினர் எங்கள் சமயம் அழிந்… விடும். எனவே எமது தெய்வங்களின் உ… வங்களை எங்கு எங்கு வைக்க முடியுமே… அங்கு அங்கு வைப்பதுடன் அதனால் மற்… வர்கள் மனஉளைச்சல் அடைந்தாலும் பரவ… யில்லை. இவ்விடயங்களில் தெய்வச்சிலை… களை வைத்தால் சமயம் வளர்ந்துவிடு… என்பது அவர்கள் விளக்கத்துக்கு ஏற்ற கரு… தாகும். இப்படியான கருத்துகளைக் கொன்… ஒவ்வொருவரிடமும் விலகி நிற்கும் ஒரு வி… ம் தங்கள் சமயம் சார்ந்த தத்துவங்களை முழுமைய… க அறிந்திருக்க முடியாத ஒரு நிலைப்பாடாகும்.

## மதங்களின் தத்துவங்கள் உணரப்படவில்லை

ஒவ்வொரு சமயமும் கூறும் தத்துவங்கள் எல்லாவற்றிலும் பொதுவானவையாகவே கருதலாம். உண்மை, நேர்மை, மற்றவர்களுக்குத் துன்பம் விளைவிக்காமை, உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் என மற்றவர் மனங்களைப் பாதிக்காத வாழ்வியல் தத்துவங்களைக் கூறுகின்றன. இவற்றுக்கு இந்து, கத்தோலிக்கம், பௌத்தம், இஸ்லாம் எதிலும் விலக்களிக்கப்படவில்லை. இவை முழுமையாக உணரப்படுமிடத்து ஒவ்வொரு நபரும் அன்பு, கருணை, காருண்யம், பரிவு மற்றவர்களை நேசித்தல் என்ற செயற்பாட்டில் இருப்பார்களேயானால் அந்தந்த மதங்களைத் தழுவியவர்களாக இருப்பதோடு ஏனைய பிணக்கு நிலை சிந்தனைகளும் பிணக்குகளும் ஏற்பட வாய்ப்பு இல்லை.

முழுமையான சமய தத்துவங்களை விளங்கிக்கொள்ளாத சில பகுதியினர் தமது விளக்கத்துக்கேற்ப இயங்குவது குறுகிய சில குழுக்களாக இயங்குவதும் இவற்றில் ஒரு வெறியை ஏற்படுத்தி அதனைப் பிழைப்பாகக் கருதி பிணக்குகளை ஏற்படுத்துவதோடு நில்லாமல் சில குழுக்கள் அதிஉச்ச கொடூரங்களுக்கும் சென்றுவிடுகின்றன. இதனைப் பற்றிச் சிந்திக்கத் தவறுமிடத்து அழிவு என்பது தவிர்க்கமுடியாததாகிவிடும்.



## தத்துவங்களை உணர்வோம்

எமது சமயத்தில் கூறப்படும் தத்துவங்கள் எவை? நாம் இவற்றை முழுமையாக அறிந்திருக்கிறோமா என ஒவ்வொருவரும் சிந்தித்தால் அல்லது மதத் தலைவர்கள், மதகுருமார் இவர்களைச் சிந்திக்க வைத்தால் பல பாதை மாற்றங்கள் தடைப்படலாம். அதற்காக எந்த மதமும் சமய போதனைகளைச் செய்யாமலிருக்கின்றன என்று கூறுவதற்கில்லை. ஆனால் இவற்றை விலத்தி மாறுபட்ட வளர்ச்சிகள் ஏற்படுகின்றன, துன்பங்கள் ஏற்படுகின்றன எனப் பார்க்கும்போது ஒவ்வொருவரும் சமுதாயத்தில் தாங்கள் பங்களிப்பைச் சரியாக வழங்கவில்லையா என்ற கேள்வி எழாமலில்லை. நாம் எமது சமய சிந்தனைகளை எங்கள் பிள்ளைகளுக்கு சரியாகப் போதிக்கவில்லையோ எனப் பெற்றோரும், சமய தத்துவங்களைச் சரியாக கற்றுக்கொடுக்கவில்லையோ என ஆசிரியர்களும், போதனைகளில் தவறுகள் உள்ளதா? என சமயத் தலைவர்களும், எமது வணக்கத்தலங்களில் சரியான வழிபாட்டு முறைகள் கையாளப்படவில்லையா? என ஆலய நிர்வாகங்களும் கவலைப்பட வேண்டிய - சிந்திக்க வேண்டிய நிலைமையாக சமுதாயச் சூழல் காணப்படுகின்றது.

ஒவ்வொரு சமயத்தவரும் சமய தத்துவங்கள் அதில் கூறப்படும் அகிம்சை, ஆன்மிகம், மனிதாபிமானம், மன ஒருமைப்பாடு முழுமையாக உணரப்பட்டாலேயே அவர் அந்தச் சமயத்துக்கு உரியவரென உரிமை கோர முடியும். உணர முடியாத நிலை இருக்குமாயின் அவர்கள் சமயம் சார்ந்தவராக இருக்கமுடியுமா? என்பது கேள்விக்குரிய விடயம் ஆகும். எனவே சமயச் செயற்பாடு சமயக் கொள்கைகளை விலத்தியதாக இருக்கும்போது பாதை மாறிய நிலைமை உருவாகிறது.

இதனைக் கட்டுப்படுத்தி சமய ஈடுபாட்டில் கொண்டுவர ஒவ்வொருவரும் சமய தத்துவங்களை உணர எந்த வழிமுறைகளைக் கையாளலாமோ அதனைப் பற்றித் தொடர்புபட்டோர் சிந்திக்கவேண்டும். அல்லாதவிடத்து சமய தத்துவங்கள் உணராத அதன் பெயரைச் சொல்லும் நாம் வேறு பாதையில் சென்று கொண்டேயிருப்போம்.

இதனைத் தற்போதைய சமூகச் சூழலின் வெளிப்பாடாகக் கருதலாம்.

## மதத் தலைவர்களுக்கு பெரும் பொறுப்புண்டு

சமூக மட்டத்தில் சயத் தலைவர்கள் தத்தம் சமயச் செயற்பாடுகளுடன் சமய சிந்தனைகளை வளர்ப்பதற்கு வேண்டிய மேலதிக ஒழுங்குகள் செயற்படுத்தப்படவேண்டும். ஒவ்வொரு வணக்கத்தலத்திலும் ஒவ்வொரு நூலகங்களை உருவாக்கலாம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மற்றவர்கள் மனதை ஏனைய சமயத்தவர்களுடைய மனங்களை புண்படுத்தும் செயற்பாடுகள் அமைந்துவிடக்கூடாது. எல்லோரும் இறைவனின் பிள்ளைகளே என்பது சமயத் தலைவர்களினதும் அறிஞர்களினதும் கருத்தாகும்.

முழுமையாக சமய தத்துவங்களை அறிந்த ஒவ்வொரு நபரும் வன்முறை, விதண்டாவாதம், முரண்பாடுடைய செயற்பாடுகளில் ஈடுபடமாட்டார்கள். ஏனெனில் எந்தவொரு சமய தத்துவங்களும் மாறான கருத்துகளை போதிப்பதில்லை. தமது சமயதத்துவங்களை முழுதாக அறிந்த ஒருவன் எந்த வன்முறை பிணக்கு நிலைகளுக்கும் செல்லமாட்டான். அவனே சமயம் சார்ந்தவனாகக் கருதப்படுவான். ஏனைய முரண்பாடான செயற்பாடுகள் பற்றிக் கவனிப்போமாகில் அதனைச் செய்தவர்கள் சமயம் சார்ந்தவர் எனக் குறிப்பிடமுடியாது. அவர்கள் தாங்கள் இருப்பதாகக் கருதும் சமய தத்துவங்களை அறியாதவர்களாவர். அறியாமையே இதற்குக் காரணமாக அமைந்துவிடுகிறது.

ஒரு பொதியிலுள்ள பொருளை வெளியில் எழுதி வைத்திருக்கும் பெயரைக் கொண்டு உள்ளே உள்ள பொருள் அதுவெனத் தீர்மானித்துவிடமுடியாது. இருக்கும் பொருள் உண்மையானதாக இருத்தல் வேண்டும். தோற்றப்பாட்டையும், சார்ந்திருக்கும் சூழலையும் வைத்து சமயம் சார்ந்தவர் எனக் கூறுவது பொருத்தமற்றது. தங்கள் தங்கள் சமய தத்துவங்களை அறிந்து கொண்டும் விளங்கிக் கொண்டாலும் மட்டுமே சமயம் சார்ந்தவராக பிரதிபலிக்க முடியும். மாறுபாடான செயற்பாடுகளில் ஈடுபடுவோர் சமயம் சார்ந்தவர் அல்லர் எனக் கூறுவதில் எந்தத் தவறும் இருக்கமுடியாது. எனவே சமயம் சார்ந்த எவரும் மற்றவருக்கு துன்பம் விளைவிக்கக் கூடிய எந்தச் செயற்பாட்டிலும் எந்தக் காலத்திலும் ஈடுபடமாட்டார்கள் என்பது உண்மையாகும்.

சமுதாயப் பொறுப்புள்ள கல்விமான்கள், சமயப் பெரியோர்கள், அரசியலாளர் யாவரும் ஒவ்வொரு தனிமனிதனும் தன்தன் சமயத்தில் கூறப்படும் தத்துவங்களையும் உண்மைகளையும் அறிய வைப்பதன் மூலம் ஒவ்வொருவரையும் சமய சார்ந்தவர்களா மாற்றுவதுடன் அமைதியானதும் ஆன்மிகமானதுமான வளர்ச்சியை ஏற்படுத்துவது எல்லோரினதும் பொறுப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூக ஊடகங்கள் என்னும் சதிவலை

ஒரு சமுதாயம் வளர அடிப்படைத் தேவையாகக் கருதப்படுவது தகவல்தொடர்பு. ஊடகத்தின் அடுத்த பரிணாமம் தகவல் தொடர்பு சாதனமாதலே. தகவலை அனுப்புபவருக்கும், பெறுபவருக்குமிடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதே தகவல் தொடர்பு சாதனம். தொலைக்காட்சி, சினிமா, வானொலி, மாதவாராந்தநாள் இதழ்கள், இணையம் இவையனைத்தும் இளைய சமுதாயத்தின் உள்ளத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆனால் துரதிஷ்டவசமாக இணைய வலைப்பின்னலின் கோடானகோடி நன்மைகளை மறுதலித்துவிட்டு அதன் தீமைகளை அரவணைத்துக் கொள்வதிலேயே இளைய சமூகம் ஆர்வம் காட்டுகிறது. ஒரு நாட்டின் சக்தியும் உறுதியும் அந்த நாட்டின் எழுச்சிமிக்க இளைய தலைமுறையாகும். அநீதிகளுக்கெதிராய்த் துடித்தெழும் இரத்தத்தின் மறு பெயர்தான் இளமை. இனிமையும் கனவுகளும் கொண்ட இளமைப்பருவம் வாழ்க்கைப் புத்தகத்தின் வித்தியாசமான ஒரு பக்கம். இளமை சகலரும் விரும்பும் ஒரு பருவம். இளமையை அடைந்தோர் காணும் மகிழ்ச்சி போலவே, இளமையை மீளப் பெற்றுக்கொள்ள விரும்பும் வயோதிபரும் இருக்கவே செய்கின்றனர். ஏன் இழந்த இளமையை மீளப் பெறவென மருந்துகள் கூட சந்தைப்படுத்தப்படுகின்றன. அந்தளவு பெறுமதியும் எல்லோராலும் விரும்பப்படுவதுமான இளமை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியதாகும். காலம் தவறிக் கவலைப்படுவதில் எந்தப் பயனுமில்லை.

**இளைஞர்கள் இன்று எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று தொடர்பூடகங்களாகும். குறிப்பாக சமூக வலைத்தளங்களாகும். உலகத்தையே உள்ளங் கைக்குள் சுருட்டி வைக்கும் ஊடகங்களின் அபரிமிதமான வளர்ச்சி இக்காலத்தில் ஆக்கத்தை விட அழிவுக்கே துணைபோகும் அவலநிலையே மிஞ்சியிருக்கின்றது.**

### இளையோரின் பாதுகாப்பே சமுதாயத்தின் இருப்பு

சமுதாயத்தின் முதுகெலும்புகளான இளைஞர்களின் பாதுகாப்பும் மேலாண்மையுமே சமுதாயத்தைக் காக்கும் அரண்களாகும். ஆனால், சமய, சமூக கலாசார விழுமியங்கள் மறக்கடிக்கப்பட்ட நிலையில் பிறந்தோம் வாழ்கிறோம். பொழுதைக் கழிக்கிறோம் நேரத்தை வீணடித்து மகிழ்ச்சியில் மூழ்கியிருக்கிறோம் என்ற உணர்வோடே இன்றைய இளம் சந்ததியினர் வளர்த்து விடப்படுகின்றனர். கொலை, கொள்ளை, பாலியல் குற்றங்கள், போதைப்பொருள் பாவனை முதலிய யாவற்றிலும் சிக்குண்டுள்ளவர்கள் பற்றிய மதிப்பீடுகள் மூலம் வாலிபர்களே பட்டியலில் அதிகமாக இருப்பதாகக் காண முடிகிறது. எனவே வாலிபர்கள் விடயமாகக் கவனம் செலுத்தப்படுவதும், ஆரோக்கியமாக நல்ல முயற்சிகளில் இறங்குவதுமே இன்று அவசரமும் அவசியமுமாகும்.


### சமூக ஊடகங்கள் என்னும் சாத்தான்

இளைஞர்கள் இன்று எதிர் நோக்கும் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று தொடர்பூடகங்களாகும். குறிப்பாக சமூக வலைத்தளங்களாகும். உலகத்தையே உள்ளங் கைக்குள் சுருட்டி வைக்கும் ஊடகங்களின் அபரிமிதமான வளர்ச்சி இக்காலத்தில் ஆக்கத்தை விட அழிவுக்கே துணைபோகும் அவலநிலையே மிஞ்சியிருக்கின்றது. மனித மனதிலுள்ள உணர்வுகளைத் தூண்டி அதில் குளிர்காயும் சமகால ஊடகக்கலாசாரம் இளைஞர்களின் இரத்தத்தில் ஊறிப்போயுள்ளது. அறிவையும் அன்பையும் மனிதப் பண்பாடுகளையும் வளர்க்க வேண்டிய ஊடகம் பொருளாதாரம், கலாசார சீரழிவு போன்றவற்றை பிரதான நோக்கங்களாகக் கொண்டு தீமைகளின் அடிவேராகத் திகழ்கின்றது.

### அதிகம் பயன்படுத்தினால்...

சமூக ஊடகத்தில் ஏதேனும் ஒரு பதிவையோ, காட்சியையோ வெளியிட்டு, அதற்குப் பிறர் விருப்பம் (லைக்) தெரிவித்து பாராட்டினால், பின்னர் அதே பாராட்டுக்காகவும், லைக்குகளுக்காகவும் தொடர்ந்து பதிவிடும் பழக்கம் - போதை - ஏற்பட்டுவிடுகிறது. சமூக ஊடகத்துக்கு அடிமையாகும் நிலை ஏற்பட்டு விடுகிறது. சமூக ஊடகங்களுக்கு அடிமையாகும் போது கல்விக்கு ஒதுக்கப்படும் நேரம் இழக்கப்படுகின்றது. மேலும் கல்வியின் மீதுள்ள ஆர்வம் இழக்கப்படுகின்றது. உளவியல் சம்பந்தமான பிரச்சினைகளான மனச்சோர்வு போன்றவை கல்வி, நினைவாற்றல் சக்தி, கவனிக்கும் ஆற்றல் போன்றவற்றைச் சீர்குலைக்கின்றது. இது பிற்காலத்தில் எதிர்கால வாழ்க்கையையும் சீர்குலைக்கும்.

இளமைப் பருவம் என்பது மிகவும் துடிதுடிப்பான பருவம். நாம் எதை முயற்சி செய்தாலும் அதனை சாதிக்கவேண்டும் என்ற முயற்சியோடு நகரும் பருவம். எனவே இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள் என்ற நிலையில், அந்தக் கனதியான பொறுப்புணர்வோடு இளைஞர்கள் இருக்கின்றார்களா? என்று கேட்டால், 'இல்லை' என்பதே அழுத்தமான பதில். சமூக ஊடகத்துக்கு இளைஞர்கள் அடிமையாவதைத் தடுக்கவும், சமூக ஊடகத்தில் ஆக்கப்பூர்வமான பங்களிப்பை அவர்கள் செய்யவும் பெற்றோர் நல்லபல அணுகுமுறைகளைக் கையாளவேண்டும். எனவே முரட்டு முட்களுக்கும் கரடு முரடான இலைத் தண்டுகளுக்கும் மத்தியில் மலரும் ரோஜா மலரில் வண்டு வந்து அமர்ந்து தேன் எடுப்பது போல, சமூகஊடகங்களில் நல்லனவற்றை எடுத்து தீயனவற்றை மாணவர்கள் தவிர்த்து நடப்பர்களே ஆனால் அவர்களது எதிர்காலம் ஒளிமயமானதாக அமையும்.





## சிறுவர்களுக்கான கதைப்பாடல் நூல் வெளியீடு

ஆசிரியர் நந்தினியின் 'மருதம்' எனும் சிறுவர்களுக்கான கதைப்பாடல் நூல் வெளியீட்டு நிகழ்வு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நூலின் முதற்பிரதியை தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலிக்கிளை நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் திருமதி அம்பிகா ஆதவன் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் மிருசுவில் அ.த.க. பாடசாலை அதிபர் திருமதி வளர்மதி கபிரியேல்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் சோ.திருக்குமரன் முதன்மை விருந்தினராகவும், சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், தென்மராட்சி கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் அலகின் இணைப்பாளர் திருமதி. இராசலட்சுமி மயில்வாகனசிங்கம் சிறப்பு விருந்தினர்களாகவும், சாவகச்சேரி முன்பள்ளிகளின் கோட்ட இணைப்பாளர் திருமதி செந்தூரன் ஆனந்தி விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஈழப்படைப்பாளர்களுக்கு புதிய களமாக 'நியூ பிச்'



உலகெங்கும் ஈழத்தமிழரிடையே பரவியிருக்கும் சினிமாத் துறைசார் திறமைசாலிகளையும் பிற வளங்களையும் ஒருங்கிணைத்தல், நெறிப்படுத்தல், நிறுவனமயமாக்குதல் மூலம் ஈழத்தமிழருக்கான சினிமாவை வளப்படுத்தலும் வெற்றிபெறச் செய்தலும் என்னும் செயலிலக்குடன் உருவாகியுள்ளது நியூ பிச் (New Pitch)என்னும் நிறுவனம்.

9 நாடுகளைச் சேர்ந்த 19 ஈழத்தமிழர்கள் இணைந்து உருவாக்கியுள்ள இந்த நிறுவனத்தின் அறிமுக விழா கடந்த மாதம் 15ஆம் திகதி கனடாவில் நடைபெற்றது.

பிரபல வானொலி அறிவிப்பாளர் தர்ஷினி ராஜா நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்க, கனேடியத் தமிழ்த் திரைப்பட மேம்பாட்டு அமையத்தின் நீண்ட கால முதன்மைச் செயற்பாட்டாளரும், ஊடகவியலாளரும் நியூ பிச் நிறுவனத்தின் நிறுவகர்களின் ஒருவருமான முகுந்த முரளி, நிறுவனத்தை அறிமுகம் செய்து உரையாற்றினார்.


'ஈழத் தமிழர்களாகிய நாம் எமக்கான சினிமா என்னும் செயற்பாட்டையும் கோட்பாட்டையும் எமது கலை, அரசியல், பொருளாதாரம் மற்றும் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கான அத்தியாவசியமானதும் தவிர்க்க முடியாததுமான ஊடகமாக வளப்படுத்தவும், வலுப்படுத்தவும் வெற்றிபெற வைக்கவும் வேண்டிய ஒரு முக்கியமான காலகட்டத்தில் நிற்கிறோம்' எனக் குறிப்பிட்ட அவர், 'எமது மக்களின் தேசமாகச் சிந்திக்கும் மனோபாவம் தான் எமது சினிமாவுக்கான மைய மூலதனம், அத்திபாரம், பெரும் பலம்' எனவும் எமது சினிமா முயற்சிகளை 'எம் தேசத்துக்கான கட்டுமானப் பணியாக மேற்கொள்ளும்போது எமது மக்கள் தம்மாலான உதவிகளையும் ஆதரவையும் வாரிவழங்குவர்' எனவும் குறிப்பிட்டார்.

நியூ பிச் நிறுவனத்தின் வலைத்தளத்தைக் கனடாவின் சமூகச் செயற்பாட்டாளரும், தொழிலதிபரும், நியூ பிச் நிறுவகர்களில் ஒருவருமான கார்த்திக் நந்தகுமார் அறிமுகம்செய்து உரையாற்றினார். அதன்போது, 'எம்மிடையே பல இளைஞர்கள் சினிமாத்துறைசார் அறிவையும், ஆற்றலையும், அனுபவத்தையும் தாமாக வளர்த்து வைத்திருக்கிறார்கள்' எனவும் 'அந்த இளைஞர்கள் தவறான சக்திகளின் பின்னால் செல்வதை தடுத்து நிறுத்தி அவர்களுக்கு சரியான வாய்ப்பைக் கொடுப்பதற்கான ஒரு புதிய களமே நியூ பிச்' எனக் குறிப்பிட்டார்.

நிகழ்வில் கனடா நாட்டு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், விரிவுரையாளரும், தொழிலதிபருமான திருமதி ராதிகா சிற்சபேசன், பிரபல இசைக் கலைச் செயற்பாட்டாளரும் தொழிலதிபருமான சொர்ணலிங்கம், இலங்கை வானொலி மற்றும் தொலைக்காட்சியின் முன்னாள் அறிவிப்பாளர் விக்னேஸ்வரன், ஊடகவியலாளரும் திரைப்பட இயக்குனருமான சுதாகரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

நியூ பிச் நிறுவனம் தனது முதலாவது செயற்றிட்டமாக இலங்கை ரூபா 6 கோடியில் ஒரு முழுநீளத் திரைப்படத்தை 2024ஆம் ஆண்டு இறுதிக்குள் தயாரிக்கப் போவதாக அறிவித்துள்ளனர். அதற்காக, உடனடி படப்பிடிப்புக்குத் தயாரான நிலையில் வைத்திருக்கக்கூடிய திரைக்கதைகளை விரும்பும் தாயகத்து திரைப்பட `இயக்குநர்கள், சமர்ப்பிக்கலாம் என்ற அறிவித்தலையும் அறிவித்துள்ளனர்.

இதுதவிர நியூ பிச் நிறுவனமானது, குறுந்திரைப் படத் தயாரிப்பு, திரைக்கதை வங்கி, திரைப்படத்திட்ட அளிக்கைப் போட்டிகள், கதைசொல்லல் போட்டிகள், குறுங்காணொளி உருவாக்கல் போட்டி மற்றும் சிறுவர்களுக்கான கதைசொல்லல் போட்டி, கதையோவியப் போட்டி போன்ற செயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்தியுள்ளது.



# கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடு

இணுவில் சிவகாமி அறநெறிப் பாடசாலை நிர்வாகத்தின் ஏற்பாட்டில் பாராட்டு விழாவும் கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடும் இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் மேற்படி பாடசாலையின் அதிபர் ந.தவசோதிநாதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வின் ஒரு பகுதியாக, சார்க் நாடுகளின் 2023ஆம் ஆண்டுக்கான தென்னாசிய இலக்கிய விருது பெற்றமைக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி க.ஸ்ரீகணேசன் கௌரவிக்கப்பட்டார். மேற்படி அறநெறிப் பாடசாலையில் கல்விகற்று 2023ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த நான்கு மாணவர்களும், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த நான்கு மாணவர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வரைந்த சித்திரங்களை உள்ளடக்கியும், 6ஆம் தர மாணவர் செ.இலக்கியனின் ஆக்க உருவாக்கத்திலும் கையெழுத்துச் சஞ்சிகைகள் வெளியிட்டு வைக்கப்பட்டன. (ம-66)



# வெற்றி மகளே!

ஞாலத்தில் உன் பெயர் நிலைக்க
காலம் பெற்றெடுத்த
ஈழ வேங்கை யல்லவா நீ!

யார் சொன்னார்கள்
இரண்டாயிரத்து ஒன்பதில்
ஈழம் மௌனித்த தென்று
அதே ஆண்டு அதே மண்
பெற்றெடுத்தது
சுட்டெரிக்கும் சிட்டுக்குருவியை
இசைக்காக...!

மெஞ்ஞானத்து இன்னமுதம் குழைத்தருளி
ஞானத்துப் பால்குடித்த சம்பந்தர் போல்

சமதர்மப் பூமியதனில் யுருவாகடி
இளமைச் சுகங்களைத் துறந்து
பிச்சடித்துக் கொண்டு புறப்பட்ட எம்மவரின்
வீரக்கதைகளைக் குடித்த கில்மிஷாவும்
பாடினாள் பாடல்

இன்று பற்றியெரியும் அக்கினிப் பொறிக்குத்
தீயினைத் தொடப் பழக்கித்
தணல் மூட்டிப் பொந்திடை காத்துப்
பெருந்தவம் செய்தது– சாரங்கா இசைக்குழு

தழல் வீரத்தில் குஞ்சென்று உண்டோ
பாரதி சொன்னது சரிதான்
பற்றியெரிந்த மேடைதனில்
வெற்றிவாகை சூடிவிட்டாள்
வீரமகள்


கனத்த பாடலுக்கும்– எம்
இனத்தின் உணர்வுக்கும்
சம்பந்தம் என்னவென்று
சபிப்பார் பலருண்டு

பாரதிக்குப் பேனா பேராயுதம்
புதுவைக்கு கவிதை பேராயுதம்
அதுபோலவே யாழிசைக்கு
பாடல்

ஈழக்கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



மலர்வு 1947.05.10

உதிர்வு 04.12.2023

## அமரர் சுப்பு கந்தசாமி

கடந்த 04.12.2023 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் சுப்பு கந்தசாமி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று புதன்கிழமை (03.01.2024) காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.


( இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

கல்வயல், சாவகச்சேரி.

குடும்பத்தினர் மகள்,மகன்,மனைவி

(CS 27545)S-1

# மரண அறிவித்தல்



பிறப்பு 02 . 05 . 1928

இறப்பு 31 . 12 . 2023

## ஆறுப்பிள்ளை சங்கரலிங்கம்

கோண்டாவில் குமரகோட்டத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுப்பிள்ளை சங்கரலிங்கம் 31.12.2023 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுப்பிள்ளை மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, இராசமணி, சிவலிங்கம் மற்றும் சிவராசா ஆகியோரின் சகோதரரும், தயாளினி, காலஞ்சென்ற காயத்திரி, றஞ்சினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசதாஸ், தயாபரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுசர்மன் - வஜிரதி (நோர்வே), விகர்ணன் - மோகனராஜி (லண்டன்), காலஞ்சென்ற துருபதன் மற்றும் ரம்மியா - நிக்ஷன் (ஜேர்மனி), றஜிதன் - மரியம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும், டிவாணாவின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சுந்தரலிங்கம், நாகேஸ்வரன் மற்றும் விஜயராணி, சறோஜினிதேவி, நவமணி, வசந்தாமணி, மகேந்திரன், இராசேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2024) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 27543) S-1

தகவல்: குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



வண்ணார்பண்ணை மேற்கு, ஸ்ரீ விசுவேசவிநாயகர் ஆலயத்தில் நீண்ட காலம் செயலாளராக தொண்டுகள் புரிந்த நல்லசிவன் சந்திரசேகரன் அவர்களின் பாசமிகு தாயார்

## நல்லசிவன் பகவதி

அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ விசுவேசவிநாயகரைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

ஸ்ரீ விசுவேசவிநாயகர் பரிபாலன சபையினரும், அடியார்களும். வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம்.

# 34 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் நடராஜா சந்திரராஜா (போஸ்)

(முன்னாள் உரிமையாளர் - "குகன் ஸ்ரோர்ஸ்" தலவாக்கலை)

தோற்றம் 20.02.1948

மறைவு 19.12.1989

திதி:- ஸப்தமி (03.01.2024)

அன்பின் திருவுருவான பாசமான அப்பாவே !
ஆண்டுகள் பல சென்றாலும் மாறாத தங்கள்
திருமுகம் என்றென்றும் எங்கள் மனதில்
உறைவிடமாய் இருந்து எங்களை வழிநடத்த
தங்கள் ஆசீர்வாதம் என்றென்றும் கிடைத்து
தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பலாலி றோட், கோண்டாவில்.


என்றும் உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்.

CS 27539) N-1

# கட்டுவன் ஐயப்பன் மார்கழி உத்தரம்!

யாழ்., ஜன. 3 கட்டுவன் ஐயப்பன் ஆலய மார்கழி உத்தரவருடாந்தத் திருவிழா இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 12ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ச)

# மரண அறிவித்தல்



மலர்வு 28 . 07 . 1931

உதிர்வு 02 . 01 . 2024

## திருமதி பரமசாமி சிவக்கொழுந்து

சரசாலை தெற்கு, தெய்வங்கேணி வீதியைப் பிறப்பிடமாகவும், சரசாலை வடக்கு ஐயனார் கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமசாமி சிவக்கொழுந்து அவர்கள் நேற்று (02.01.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமசாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னம்பலம் செங்கமலம் தம்பதிகளின் சிரேஷ்டபுதல்வியும், காலஞ்சென்ற நல்லசேகரம்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் மருமகளும், அமரர் ஞானேஸ்வரி, மங்களேஸ்வரி, நாகேஸ்வரி, உதயகுமாரி, விஜயகுமாரி, சாந்தகுமாரி, புவனகுமாரி மற்றும் நவனகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், மார்க்கண்டு, அமரர் திருஞானசம்பந்தர், சதானந்தம், பாலசுந்தரம், சிறிபாஸ்கரன், கமலவதனா, சிவகுமாரன், தேவமனோகரன் மற்றும் உதயகுமார் ஆகியோரின் மாமியும், உதயசூரியன் - காயத்திரி, றஜிதா - ஜெயந்தன், அமரர் விபிசன், ஆரணி - பிரணவன், வைஷ்ணவி, தனுஜன், அபிஷனா, மதுரா, தேனுகா, பூமிகா, அஸ்வினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபிலாஸ், அட்சரா, அபிசரன், அக்ஷயா, அபூர்வன், ஆரணன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2024) வியாழக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை கொம்பிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர். 077 728 6053 (மகன்)

(CR 41441) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 18 • 10 • 1974

மறைவு 23 • 12 • 2023

## தங்கையா சுஜீவன்

331, யாழ்வீதி மானிப்பாயை பிறப்பிடமாகவும் கொலன்டை வசிப்பிடமாக கொண்ட தங்கையா சுஜீவன் கடந்த (23.12.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய சின்னதம்பி கமலா தேவி புவனேஸ்வரன் - மகேஸ்வரி தம்பதியினரது அன்பு பேரனும், காலஞ்சென்ற தங்கையா மற்றும் கொங்கலட்சுமியின் அன்பு மகனும், காலஞ்சென்ற கிருஷ்ணா மற்றும் தெய்வம் ஆகியோரின் மருமகனும், சஜிவனியின் அன்பு கணவரும், கிறிஸ், ஹரிஸ், கனிஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுஜாதா, காலஞ்சென்ற சுதர்சன் மற்றும் கீர்த்திகா (கீத்தா), கார்த்திகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அரசு (றெஜி), ஞானச்சந்திரன், கிரிசாந்தன் ஆகியோரின் மைத்துனரும், பபித்திரா, சுலக்சன், கௌசிகா, டிலக்சன், டிலக்சிகா, ஆகாஷ், அஸ்வின் ஆகியோரின் தாய்மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2024) புதன்கிழமை கொலன்டில் நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்பு:
077 760 6320, 077 020 0540

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## ஸ்ரீமதி கோதை நாயகி அம்மாள் பாஸ்கரன்

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும், முதலாம் சப்பல் ஒழுங்கை, (1st chappel lane) வெள்ளவத்தை, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி கோதை நாயகி அம்மாள் பாஸ்கரன் அவர்கள் (01.01.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா ஐயர் (இருபாலை, வேளாதோப்பு), செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், திரு பாஸ்கரன் (மின் பொறியியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் அகிலேஸ்வரி அவர்களின் பாசமிகு மருமகளும், ஹம்ஸத்வனி, (MBA UK) கிருத்திகா, (முன்னாள் வங்கி ஊழியர், மக்கள் வங்கி, திருகோணமலை / France) நர்மதா (தேவார இசைக் கலைமணி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், இந்தியா) அரிஹரசுதன் Senior Engineer/ Manager (Post Sales & Solutions) Metropolitan Colombo) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற கேதீஸ்வரன் மற்றும் மதனராஜ் நீதீஸ்வரன், ஹேமலதா ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற ஆத்மானந்தா, சுஹானந்தா பாரானந்தா, ஸ்ரீரஞ்சனி அம்மாள், மற்றும் விபுலானந்தா (திருகோணமலை) ஆகியோரின் பாசமுள்ள சகோதரியும், மானசா (France) ஆரோகி (France) சித்திரன் (France) ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.01.2024) புதன்கிழமை, புதிய செம்மணி வீதி, வேளாதோப்பு கல்வியங்காடு, யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரது மாமியாரின் (அப்பம்மா) இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைக்காக செம்மணி இந்துப் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம்
+94 71 9931726

தகவல்:
அரிஹரசுதன் (மகன்)
மற்றும் குடும்பத்தினர்

27132) (K-1)

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 25 • 04 • 1994

ஆண்டவன் பிடியில் 03 • 01 • 2016



## அமரர் தவராசா கபிஷாந்

எட்டு வருடமாக உனைப்பிரிந்து
தீரா துயரில் - நாம்
என்ன பாவம் செய்தோமோ
ஏங்கித் தவிக்கின்றோம் - நீ
எப்போது வருவாய் என ......!

18, ஈச்சங்காடு அரியாலை,
யாழ்ப்பாணம்.
T.P.: 076 539 8916

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.
## படவரைஞர்களைப் பதிவு செய்தல் / புதுப்பித்தல் - 2024

2023.12.12 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கமைவாக 2024 ஆம் ஆண்டிற்கு படவரைஞராக பதிவு செய்வதற்கு / புதுப்பிப்பதற்கு கோரப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக NVQ Level 4 இன் தொழில்நுட்ப (கட்டடம்) வரைபு - Drafting Technology (Building) கற்கைநெறிக்கான சான்றிதழுடன் NVQ Level 5 இன் தொழில்நுட்ப (கட்டடம்) வரைபிற்கான கற்கைநெறியினை தற்போது பயின்று கொண்டிருப்பவர்களும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். மேலும் விண்ணப்பத் திகதி 2024.01.16 வரை நீடிக்கப்பட்டுள்ளது.


சீ.சபேசன்,
செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

2024.01.03

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 • 09 • 1927



மறைவு 01 • 01 • 2024

## திருமதி நல்லசிவன் பகவதி

கொழும்பைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லசிவன் பகவதி அவர்கள் கடந்த (01.01.2024) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லசிவன் ஆச்சாரி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கருப்பையா ஆச்சாரி, முத்தம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன் ஆச்சாரி, லட்சுமி ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா ஆச்சாரி, ஐயம்பெருமாள் ஆச்சாரி, சந்தனம் ஆச்சாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ருக்குமணி, ராஜி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், நாகேஸ்வரி (வவுனியா), கணேசன் (கொழும்பு), பாலசுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்), சந்திரசேகரன் (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற விஜயரட்ணம் (வவுனியா), தம்பிராஜா (பிரான்ஸ்), மகேஸ்வரி (சுவிஸ்), தவராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமசிவம், ரேவதி, காலஞ்சென்ற நகுலேஸ்வரி, விஜயகுமாரி (ஆசிரியர், யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), புவனேஸ்வரி, சாந்தி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயரட்ணம், மோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வேணி, முத்து, ராஜன், உதயா, பபிதா, ஜெகன், இனிசா, இந்துஜா (பிரான்ஸ்), ஷாம் திலீபன், டயாளினி, ஷயந்தன், கீர்த்தனன், சுவேனுகா, டசி, சிவா, கிறிஸ்டி, ஜோன், கிறேசி, ஜோன்சன், டில்சன், துசாந்தன், பவித், ஜெயாளன், ஜெயாளினி, நவீசன், ரவீசன், ஹன்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சானுகா, நவிசன், தனுஷியன், பவித்திரன், பவினகா, பிருத்திகா, அஸ்வினி, லக்ஷிகா, சுந்தரேஸ், பிரவீன், அஸ்வின், கன்சிகா, ஜோதிசன், சந்தனா, ஆருக், நிமேஷப்பிரதா, சந்தோசி, சாதனா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2A, ஐயனார் கோவில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 601 6297

(CS 27544) S-1

# இன்னும் 20 எம்.பி.க்கள் எம்மோடு இணைவார்கள்

## ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கை

கொழும்பு, ஜன. 3

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையவுள்ள எதிரணிக் கூட்டணியில் மேலும் இருபது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணையவுள்ளனர் என்று சுதந்திர மக்கள் சபையின் நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'தனி ஒருவரால் இந்த நாட்டை மீட்க முடியாது. நல்லவர்கள் ஒன்றிணையவேண்டும். அதற்கான சிறந்த களம் எதிரணியின் கூட்டணி. ஐக்கிய மக்கள் சக்தியுடன் நாம் பேச்சு நடத்தினோம். நாட்டுக்காகவே தவிர, பதவிக்காக கூட்டணியில் இணையும் முடிவை எடுக்கவில்லை. நாம் பதவிகளை விட்டுவிட்டு வந்தவர்கள். ஐக்கிய மக்கள் சக்தியில் திறமையானவர்கள் உள்ளனர். எமது அணியிலும் திறமையானவர்கள் உள்ளனர். சுதந்திரக்கட்சியில் இருந்தும் ஒருவர் இணைந்துள்ளார். நாடாளுமன்றத்தில் உள்ள மேலும் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிரணிக் கூட்டணியில் இணைய பேச்சு நடத்துகின்றனர். ஊழல், மோசடி அற்ற உறுப்பினர்களே அவர்கள். இவ்வாறு கூட்டணி அமைத்து நல்லவர்கள், திறமையானவர்கள் இணைந்தால் நாட்டை மீட்கலாம்' - என்றார்.

(அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

**இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு ஆலோசகர் பதவிக்கான** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அடிப்படைத் தகைமைகள் :**

* G.C.E(O/L) பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
* 18 - 60 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை (CV) கீழுள்ள Whatsapp இலக்கத்திற்கு அல்லது மின்னஞ்சல் (Email) முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**077 348 1282**

**yprasa@gmail.com**

# வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி NCDB பதவி வெற்றிடம்

**1. நிர்வாக, மனிதவள முகாமையாளர் (1)**
* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான தகமை: நிர்வாகம், மனிதவள முகாமைத்துவம், முகாமைத்துவம் சார்ந்த துறை.
* நிர்வாக, மனிதவள துறையில் குறைந்த பட்சம் 5 வருட தொழில் அனுபவம்.
* Ms Office மென்பொருளை கையாளும் திறன்
* அறிக்கை தயாரித்தல் மற்றும் தகவல் தொடர்பாடல் திறன்
* மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருத்தல் விரும்பத்தக்கது

**2. சந்தைப்படுத்தல் முகாமையாளர் (1)**
* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் (சந்தைப்படுத்தல்) அல்லது சந்தைப்படுத்தல், பொருளாதாரம் சார்ந்த துறையிலான தொழிற் தகைமை / அனுபவம்
* சந்தைப்படுத்தல் துறையில் குறைந்த பட்சம் 5 வருட தொழில் அனுபவம்.
* அறிக்கை தயாரித்தல் மற்றும் மென்பொருள் கையாளும் திறன்
* புதிய வர்த்தக திட்டங்களை (Business Plan) தயாரிக்கும் ஆற்றல்
* சிறந்த தொடர்பாடல் திறனை கொண்டிருத்தல்
* மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருத்தல் விரும்பத்தக்கது

**3. அபிவிருத்தி முகாமையாளர் (1)**
* பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான தகமை: கணக்கியல் முகாமைத்துவத் துறை, பொருளாதாரம் சார்ந்த துறை.
* அபிவிருத்தி துறையில் குறைந்த பட்சம் 5 வருட தொழில் அனுபவம்.
* Accounting மென்பொருளை கையாளும் திறன்
* வடமாகாணத்தின் எப் பாகத்திற்கும் பயணம் செய்யக் கூடியவராகவும் சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
* செயற்றிட்டங்களை தயாரிக்கும் ஆற்றல்
* புதிய வர்த்தக திட்டங்களை (Business Plan) தயாரிக்கும் ஆற்றல்
* சிறந்த தொடர்பாடல் திறனை கொண்டிருத்தல்

**4. சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் (1)**
* பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான தகமை: கணக்கியல் முகாமைத்துவத் துறை, பொருளாதாரம் சார்ந்த துறை.
* அபிவிருத்தி துறையில் குறைந்த பட்சம் 5 வருட தொழில் அனுபவம்.
* நிதி மற்றும் கணக்கீடு தொடர்பான மேலதிக கல்வித்தகைமைக்கு முன்னுரிமை
* வடமாகாணத்தின் எப் பாகத்திற்கும் பயணம் செய்யக் கூடியவராகவும் சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**5. அபிவிருத்தி உத்தியோகத்தர் (1)**
* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் பட்டம் அல்லது அதற்கு இணையான தகமை: முகாமைத்துவம், கணக்கியல் துறை.
* குறைந்த பட்சம் 2 வருடம் அபிவிருத்தி திட்டங்களில் வேலை செய்த அனுபவம்.
* கணக்காய்வு அறிக்கைகளை பகுப்பாய்வு செய்யக்கூடிய ஆற்றல்
* வடமாகாணத்தின் எப் பாகத்திற்கும் பயணம் செய்யக் கூடியவராகவும் சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**6. சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (யாழ்ப்பாணம் - 1, கிளிநொச்சி - 1)**
* சந்தைப்படுத்தல் சார்ந்த துறையிலான கல்வித்தகைமை / தொழிற்தகைமை
* சந்தைப்படுத்தல் துறையில் குறைந்த பட்சம் 2 வருட தொழில் அனுபவம்.
* சிறந்த தொடர்பாடல் திறனை கொண்டிருத்தல்
* வடமாகாணத்தின் எப் பாகத்திலும் கடமையாற்றக் கூடியவராகவும் பயணம் செய்யக் கூடியவராகவும் சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**7. அலுவலக உதவியாளர் (1)**
* க.பொ.த. சாதாரண தரத்திற்கு மேற்பட்ட தகைமை கொண்டிருத்தல் வேண்டும்
* சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**பொதுவான தகைமை**
* கூட்டுறவு துறை சார்ந்த அனுபவம் கொண்டிருத்தல்

பொருத்தமான விண்ணப்பதாரிகள் lk.ncdb@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்பு கொண்டு தங்கள் பதவி நிலைக்கான விண்ணப்பபடிவத்தை பெற்று ஜனவரி 23 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

* **விண்ணப்ப முடிவுத் திகதி : 23.01.2024**
* **விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :**
  **தலைவர், வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி, முதியோர் இல்ல வளாகம், கைதடி.**
* **விண்ணப்பம் யாவும் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.**
* **சகல பதவிகளுக்குமான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**
* **பதவி நியமனம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும்.**

**தலைவர்**

(cr.41433) N.1

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 11 . 1947



மறைவு 02 . 01 . 2024

## அப்பையா சிவக்கொழுந்து

கீரிமலையினைப் பிறப்பிடமாகவும், கீரிமலை வீதி கொல்லங்கலட்டியினை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா சிவக்கொழுந்து நேற்று (02.01.2024) செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகர் அப்பையாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகர் (கன்னர்), இலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், மகேஸ்வரி மற்றும் உருத்திரலிங்கம், மகாலக்சுமி, இராசேந்திரம், கமலேஸ்வரி, நகுலேஸ்வரி, தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், செல்லக்குட்டி, சின்னத்துரை, அப்புத்துரை, இராசாத்தி மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் முருகதாஸ் (லண்டன்), அன்னலட்சுமி, தேவதாஸ் (ஜேர்மனி), கருணதாஸ் (சிறி), சிவதாஸ் (தாட்ஷா பான்சி சுன்னாகம்), குகதாஸ் (லண்டன்), தவதாஸ் (தாஸ் லாப் சுன்னாகம்), மகாதேவி (இலங்கை வங்கி, மல்லாகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகாதட்ஷினி (லண்டன்), இரகுநாதன் (மகிந்தன் கணினி அச்சகம் சுன்னாகம்), ஸ்ரீபிரகாஷினி (ஜேர்மனி), நிஷாந்தினி, அர்ச்சனா, சுவர்ணா (லண்டன்), லலிதாம்பிகை, முகுந்தன் (ஆசிரியர் - ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை) ஆகியோரின் மாமியாரும், மகிந்தன், மயூரன், கீர்த்தனா, மதீசனன், தாட்ஷா, தருண், நிகன்யா, நிதர்சன், நிரூபன், தஸ்மிகா, யஸ்மினா, தரண்யா, தினோஜன், ஜனகன், பர்வின், ஆயினி, றசின், அஸ்விகா, அக்சயன், தரணிகா, ஹரிணிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2024) புதன்கிழமை கீரிமலை வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**தொடர்புகளுக்கு :**

| | |
|---|---|
| அ.கருணதாஸ் (சிறி) | - 077 595 6994 |
| அ.சிவதாஸ் | - 077 691 3151 |
| அ.தவதாஸ் | - 077 602 7109 |

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cs.53378) (N.1)

# முதலாம் ஆண்டு நினைவுகளில்

தோற்றம் 15 . 06 . 1932



மறைவு 14 . 01 . 2023

## அமரர் தியாகராசா சிவயோகம்

எம் அன்பு நிறைந்த அம்மாவே
ஆலமரம் போன்று நீ வாழ்ந்து - அதில்
இளைப்பாறும் பறவைகள் போன்று
பிள்ளைகளும் வாழ்ந்தோம்
எம்மை எல்லாம் விட்டுச்செல்ல
எப்படி அம்மா மனம் வந்தது
இன்று சிறகுகள் உடைந்த பறவைகள்
போன்று இன்று வாழ்கின்றோம்
உம்மை நினைக்காத நேரம் இல்லை
அம்மா எல்லோரையும் மதித்து
நடக்கும் பண்பும் பற்றுடன்
சுற்றத்தவரை அரவணைத்து வாழ்ந்த
சீர்பெற்ற வாழ்க்கை என்றும்எம் வாழ்நாள்
வரை நினைவிருக்கும் அம்மா இன்னொரு
பிறப்பு இருப்பது உண்மையெனில்
நீங்களே வேண்டும் எம் அம்மாவே

**பிரிவால் துயருறும்:**
மானிப்பாய் றோட், ஆனைக்கோட்டை. (CS 53384) S-1 **குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியின் யாழ். வருகை

## போராட்டம் நடத்த எண்மருக்குத் தடை?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு நாளை வரவுள்ள நிலையில், ரணிலின் வருகையை எதிர்த்துப் போராட்டம் நடத்தலாம் என்று கருதப்படும் எட்டுப் பேருக்கு நீதிமன்றக் கட்டளையின் ஊடாகப் போராட்டம் நடத்துவதற்குத் தடைவிதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸாரால் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த மனு மீதான விசாரணை இன்று இடம்பெறவுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், வேலன் சுவாமிகள் மற்றும் பொது அமைப்புக்களைச் சேர்ந்த எட்டுப் பேருக்கே இவ்வாறு தடைகோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-125)

## மரக்கடத்தல் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 3

வீர மரக் குற்றிகளைக் கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் மாவட்ட வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினரால் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கையின்போதே இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டது. சந்தேகநபரை சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தும் நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-125)

மதுபானசாலைக்கு எதிராக

## உடுப்பிட்டியில் இன்று கடையடைப்புப் போர்!

யாழ்ப்பாணம், ஜன. 3

உடுப்பிட்டி, இமையாணன் மேற்குப் பகுதியில் பொதுமக்களின் கடும் எதிர்ப்பை மீறி அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலையை அங்கிருந்து அகற்றுமாறு வலியுறுத்தி இன்று புதன்கிழமை உடுப்பிட்டி சிவில் சமூகமட்ட அமைப்புகளின் ஏற்பாட்டில் கடையடைப்புப் போராட்டமும் கண்டன ஆர்ப்பாட்டமும் இடம்பெறவுள்ளது.

இமையாணன் மேற்கு விநாயகர் சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஒன்றுகூடிய உடுப்பிட்டியைச் சேர்ந்த 21 சிவில் சமூகமட்ட அமைப்புகள் கடையடைப்பு மற்றும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானித்ததன் அடிப்படையில் இந்தப்போராட்டங்கள் இடம்பெறவுள்ளன.

உடுப்பிட்டியில் பாடசாலை மற்றும் மதத் தலங்களுக்கு அண்மையாகவும், குடிமனைகளுக்கு மத்தியிலும் மதுபானசாலையொன்று திறக்கப்பட்டுள்ளது. இதற்கு மக்கள் கடும் எதிர்ப்பைப் பதிவு செய்ததையடுத்து, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை உடுப்பிட்டியின் சிவில் சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் கடந்த டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது, 'இரண்டு நாள்களுக்குள் தீர்வு வழங்கப்படும்' என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். அவ்வாறு தீர்வு வழங்கப்படாததையடுத்தே இந்தப் போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ம-66)

### டெங்கைத்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த வருடம் 2 ஆயிரத்து 505 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. டிசெம்பர் மாதம் மட்டும் மூவர் டெங்கால் உயிரிழந்துள்ளனர். 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆயிரம் பேருக்கும் அதிகமானோருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. நிலைமை நாளுக்குநாள் கைமீறிக்கொண்டிருக்கும் நிலையில் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக

சுற்றிவளைப்புகள் மற்றும் தேடுதல்கள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக கோப்பாய், நல்லூர், சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர் பகுதிகளில் டெங்குக்கு ஏதுநிலையுடன் ஆதனங்களைப்பேணிய 12 பேருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தொடரப்பட்டுள்ளது. கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மூவருக்கு எதிராகவும், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 8 பேருக்கு எதிராகவும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் ஆலயமொன்றின் நிர்வாகத்தினருக்கு எதிராகவுமே இவ்வாறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அடுத்தடுத்த நாள்களில் இந்த செயற்திட்டத்தை மேலும் தீவிரமாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

### 2023ஆம்...

பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு தாழமுக்கம் மூலமே அதிகமான மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. 2022ஆம் ஆண்டு மூன்று தாழமுக்கம் ஏற்பட்டது. இதன்மூலம் ஆயிரத்து 624 மில்லிலீற்றர் மழைவீழ்ச்சி கிடைத்தது. ஆனால், 2023ஆம் ஆண்டில் ஒரேயொரு தாழமுக்கம் மட்டுமே ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் ஆயிரத்து 436.7 மில்லிலீற்றர் மழை வீழ்ச்சி கிடைத்துள்ளது. 2021ஆம் ஆண்டில் மழை வீழ்ச்சி 2 ஆயிரத்து 43.3 மில்லிலீற்றராகப் பதிவானமையும் குறிப்பிடத்தக்கது - என்றார். (அ-ம-125)

### ஈழத்தமிழர்களுக்கு...

களுக்கு இரட்டைக்குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்று ஆளும் பா.ஜ.க.வின் தமிழகத் தலைவர் அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையிலிருந்து வெவ்வேறு காலகட்டங்களில் தமிழகத்துக்கு வருகை தந்த 5 முதல் 6 இலட்சம் வரையிலான தமிழர்களுக்கு முறையானதங்குமிடம் உள்ளிட்ட வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பது உள்ளிட்ட நிறைய வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அவை உடனடியாகவும், சிறப்பாகவும் நிறைவேற்றப்படவேண்டும்.

வெவ்வேறு காலகட்டங்களில் இலங்கையில் போர் நடந்து கொண்டிருக்கும் சூழலில், இலங்கை வம்சாவளி தமிழர்கள் பலர் இந்தியாவுக்கு வருகை தந்தனர். அவர்களில் பலரும் இங்கு குடியுரிமை இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் சிலர் சட்டவிரோதமாகவும் இங்கு வருகை தந்துள்ளனர். அவர்களில் பலர் இங்கு குழந்தை பெற்றிருக்கிறார்கள். வேறு சிலருக்கோ இலங்கையிலும் அவர்கள் மீது வழக்குகள் இல்லை. இங்கும் அவர்கள் மீது வழக்குகள் இல்லை. இருப்பினும் அவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகையால் அப்படிப்பட்டவர்களுக்கு குடியுரிமை வழங்கவேண்டும்.

தமிழக முகாம்களில் பிறந்தவர்களுக்கும், தீவிர குற்றப்பின்னணி இல்லாதவர்களுக்கும் இந்தியக் குடியுரிமை வழங்குவது குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மத்திய அரசுக்குக் கோரிக்கை வைத்திருக்கிறோம். இதற்கு விரைவில் நல்லதொரு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது' - என்றார். (அ-ம)

### கச்சதீவு...

மற்றும் 24ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கத்தோலிக்கர்களின் 'புனித காலமான' தவக்காலத்தில் கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தில் திருவிழா நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு அந்தோனியார் ஆலயத் திருவிழா பெப்ரவரி 23ஆம் மற்றும் 24ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் விழா, பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி திருவிழாத் திருப்பலி, கூட்டுப்பிரார்த்தனை, நற்கருணை ஆராதனை என்பவற்றுடன் நிறைவுக்கு வரவுள்ளது. திருவிழாவுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம)

### வற்வரிக்கு...

எனச் சுட்டிக்காட்டி, உள்நாட்டு இறைவரி திணைக்களத்துக்கு முன்பாக துக்கச் சோறு சமைத்து எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வற்வரி அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தே சிவில் செயற்பாட்டாளர்கள் சிலர் இணைந்து, இவ்வாறு துக்கச்சோறு சமைத்து எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

துக்கச்சோறு சமைத்தவர்கள் காகங்களுக்கு அவற்றைப் பரிமாறினார்கள். 'கா, கா...' என காகங்களை அழைத்த அவர்கள், 'காகம் அமெரிக்கா சென்றுவிட்டது' என பஸில் ராஜபக்சவையும் மறைமுகமாகச் சாடினர்.

நாட்டு மக்களுக்கு உண்பதற்கு வழியில்லை. அதனை வெளிப்படுத்தும் விதமாகவும், வரிகளைக் குறைக்குமாறு வலியுறுத்தியுமே இவ்வாறு செயற்பட்டோம் என சிவில் செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். வரித்திணைக்கள அதிகாரிகள் முறையாகச் செயற்பட்டால், முறையான வரிகளை வசூலித்தால் அரச வருமானம் அதிகரிக்கும் எனவும் குறிப்பிட்டனர். (அ-ம-44)

### மலையக...

சேர்ந்த சகோதரர்கள் இருவர் உடல் கருகி உயிரிழந்தனர்.

வேலாயுதம் ரவி (வயது-37) மற்றும் வேலாயுதம் புவனேஸ்வரம் (வயது-45) ஆகிய இருவரே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர்.

சகோதரர்களான இவர்கள் இருவரும் பருத்தித்துறை முனைப் பகுதியில் செயற்பட்டுவரும் தனியார் மீன் ஏற்றுமதி நிறுவனத்தில் கடந்த 10 ஆண்டுகளாகப் பணியாற்றி வந்துள்ளனர்.

புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டு நேற்றுமுன்தினம் பின்னிரவு களஞ்சியசாலைக்குத்திரும்பியநிலையிலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு நேரில் சென்ற பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி கே.வாசுதேவா ஆகியோர் விபத்துதொடர்பில்களவிசாரணைகளை ஆரம்பித்தனர். சடலங்கள் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

தீ விபத்து இடம்பெற்ற குறித்த களஞ்சிய அறையில் சமையலுக்குப் பயன்படுத்தப்பட்ட சமையல் எரிவாயு சிலிண்டர் மற்றும் அடுப்பு மற்றும் மின் இணைப்பு தொகுதி என்பன முற்றாக எரிவடைந்த நிலையில் காணப்பட்டன.

களஞ்சியசாலையின் உரிமையாளர் உள்ளிட்ட மூவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்றுத் தமது சாட்சியத்தைப் பதிவுசெய்தனர். (அ-ம-26-100-66)

### ஜே.என்...

இந்தியாவில் பதிவாகிவரும் புதிய ஜே.என். - 1 கொரோனாத் திரிபு குறித்து இந்த நாள்களில் எமது நாட்டிலும் கருத்தாடல் இடம்பெற்று வருகின்றது. தற்போது உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளபடி, இது தொடர்பாகத் தேவையற்ற அச்சம் கொள்ளவேண்டாம். ஜே.என். - 1 கொரோனாத் திரிபு குறித்து சுகாதார அமைச்சு தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆதரவுடன், இது தொடர்பாக மாதிரிச் சோதனைகள் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில், இந்தியாவில் பதிவாகியுள்ள புதிய கொவிட் பிறழ்வு கொண்ட நோயாளிகள் எவரும் இலங்கைக்குள் இல்லை. ஆனால், மெத்தனமாக இருக்காமல் கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் பின்பற்றப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றுமாறு மக்களைக் கோருகின்றேன் - என்றார். (அ-ம)

### திடீர்...

போது கட்டுப்பாட்டு விலையை மீறிய வகையில்விற்பனைசெய்தல், விலையை மாற்றியமைத்து விற்பனை செய்தல், விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை, இலங்கை தரநிர்ணய சான்றிதழ் இன்மை, இறக்குமதியாளர் விவரம் இன்மை, காலாவதியான பொருள் இருப்பு, பதுக்கல் ஆகிய குற்றங்களின் அடிப்படையில் பல்வேறு வழக்குகள் நீதிமன்றில் தொடரப்பட்டன. இவற்றுக்கு நீதிமன்றங்களால் தண்டப்பணம் அறவிடப்பட்ட நிலையில், தண்டப்பணத்தின் மொத்தப் பெறுமதி ஒரு கோடியே 4 இலட்சத்து 99 ஆயிரத்து 500 ரூபாவாக அமைந்துள்ளது - என்றார். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி விற்பனைக்கு**

தாவடிப்பகுதியிலும், உரும்பிராயிலும்
11/2 பரப்புக் காணி விற்பனைக்கு.

தொடர்பு 0776011135

**தைப்பொங்கல் பெருவிழா**

**நீச்சல் போட்டி**

இடம் :
செட்டித்தெரு, நல்லூர்.

காலம் :
10.01.2024 - 20.01.2024

தொடர்பு: 077 291 2809

வாருங்கள் முயன்று வெல்லுங்கள்
வெற்றி உங்களுடையது.

# தன்னைத் தானே தாக்கிய ரஷ்யா!

உக்ரைன் மீது தாக்குதல் நடத்துவதற்காகச் சென்ற ரஷ்ய விமானங்கள், தவறுதலாக ரஷ்யாவுக்குள்ளேயே தாக்குதல் நடத்தியுள்ளன.

நேற்று அதிகாலை இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. எனினும் எவரும் இறக்கவில்லை. சில வீடுகள் சேதமடைந்துள்ளன. அவற்றுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கைகள் ரஷ்யாவால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(ம-6)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கொட்டடி ( லைடன் பக்ரி அருகாமையில் )
உள்ள முத்தமிழ் வீதியில் சுற்று மதிலுடன்
வீட்டுடன் 04 பரப்புக்காணி
விற்பனைக்குண்டு

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கொட்டடி சந்திக்கு அருகாமையில்
கூழாவடி வீதியில் 2 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு

TP 077 285 50 68 WhatsApp +004520430191

**கட்டடம் வாடகைக்குத் தேவை**

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு
கிளை காரியாலயம் அமைப்பதற்கு
சாவகச்சேரி நகர்பகுதில்
கட்டடம் வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 120 9973

**சிறிராம் ஜுவல்லர்ஸ்**

இல.158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருட அனுபவம் வாய்ந்த
நாம் எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளிற்கு இணங்க
எதிர்வரும் தைபொங்கல் தினத்தை முன்னிட்டு
தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடியினை
வழங்கவுள்ளோம்



* 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி, சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்
* அனைத்து விதமான தங்க ஆபரணங்களையும் 16.01.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
* அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை ஊறுதிசெய்யும் தரச்சான்றும் வழங்கப்படும்.
* தங்கத்தின் அன்றைய நாளிற்கான விலை நிலவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

**சிறிராம் ஜுவல்லர்ஸ்**
22 கரட் தங்க நகைகளின் சாம்ராஜ்ஜம்

தொடர்பு: 077 165 1729, 077 773 0567, 021 222 8334

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 12 . 1944



மறைவு 02 . 01 . 2024

## திருமதி ஜெயக்குமார் அன்னம்மா பவளமணி

(முன்னாள் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பிரதம எழுதுவினைஞர்,
முன்னாள் உப அதிபர் சிவபூமி மனவிருத்தி பாடசாலை - கோண்டாவில்)


திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், இல 07, கலாசாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயக்குமார் அன்னம்மா பவளமணி அவர்கள் நேற்று (02.01.2024) செவ்வாயக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான J.N.பொன்னையா சபீனம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற குமாரசாமி மங்கையர்க்கரசியின் மருமகளும், காலஞ்சென்ற குமாரசாமி ஜெயக்குமார் (முன்னாள் கணக்காளர், நல்லூர் MPCS) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான P.S.திருச்செல்வம், P.X.S.குலசிங்கம், தவமணி, பூமணி, செல்வமணி, சோதிமணி, மற்றும் திரேஷம்மா, இராஜயோகமணி, பாக்கியராஜா, பெனடிக்கா ருக்குமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பாலகுமார், லீலாவதி, சந்திரராணி, மரியதாசன், அன்ரனிப்பிள்ளை, யோகரட்ணம், சண்முகநாதன் மற்றும் சிவலிங்கம், உதயராணி, பரமேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும், ஜோன்ஷன், ஜெயந்தி, தமயந்தி, ஜக்ஷன், சுஜீவா, விவேகானந்தி, விவேகாநந்தன், உமேஸ்வரன், லக்ஷாயினி, கிரிஷாயினி, ஆகியோரின் மாமியும், வதனா, ஜமுனா, ரஞ்சன், ரகு, ரதீனா, மோகன், பாஸ்கரன், வரேந்திரன், றெஜினோல்ட், தர்மேதரன், ரவீந்திரன் ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க நிகழ்வுகள் இன்று (03.01.2024) புதன்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு பூதவுடல் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, இறுதி ஆராதனைக்காக திருநெல்வேலி புனித சவேரியார் தேவாலயத்தில் வைக்கப்பட்டு, யாழ்ப்பாணம் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## அமரர் திருமதி தங்கம்மா செல்வரட்ணம்

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்டு, தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி தங்கம்மா செல்வரட்ணம் நேற்று (02.01.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வரட்ணம் (பொறியியலாளர் - RDA) அவர்களின் அன்பு மனைவியும், சுதாகரன் (ICS Study, Abroad), பக்தகௌரி (SGS Lanka, Colombo) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரகுசுதன் (Rezgateway), லக்ஷ்மப்பிரியா (ஆசிரியை, சைவமங்கையர் வித்தியாலயம், வெள்ளவத்தை), ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெய்சாயி நிகேதனின் (St.Thomas College, Mount Lavinia) அன்பு அம்மம்மாவும், தரணியாவின் (Colombo Ladies College) அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நாளை (04.01.2024) வியாழக்கிழமை காலை 08.00 மணி தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 03.00 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று, மாலை 04.00 மணியளவில் கணத்தை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 301 3060 - மகன்
077 735 8252 - மகள் (CS 27550) S-1

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

மலர்வு 25 . 07 . 1955



உதிர்வு 31 . 12 . 2023

## அமரர் துரைராசா (பலூன்) புஸ்பராணி

யாழ்ப்பாணம், நீராவியடியைப் பிறப்பிடமாகவும் யாழ்.வண்ணார்பண்ணை 65 பத்திரகாளி கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி துரைராசா புஸ்பராணி (ராசா) 31.12.2023 இறைபதம் எய்தினார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 04.01.2024 வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் கோம்பயமணல் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை ஆழ்ந்த துயரத்துடன் அறியத் தருகின்றோம்.

கேசாவில் வீதி,
பத்திரகாளி கோவிலடி,
வண்ணார்பண்ணை.

தகவல்: பிள்ளைகள்
075 4514745
0094754514745

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org